# போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளி கோயில்

என்.கே.எஸ்.திருச்செல்வம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளி கோயில்

என்.கே.எஸ்.திருச்செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளி கோயில்

என்.கே.எஸ்.திருச்செல்வம் *B.A*

வரலாற்றுத்துறை, சென்னை பல்கலைக்கழகம்

வெளியீடு

அருந்ததி பதிப்பகம்

கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போர்த்துக்கேயர் அழித்த**
**பெந்தோட்டை காளி கோயில்**
ஆசிரியர் : என்.கே.எஸ்.திருச்செல்வம்
உரிமை : என்.கே.எஸ்.திருச்செல்வம் ©
வெளியீடு : அருந்ததி பதிப்பகம்
68/14, ஸ்ரீ சித்தார்த்த வீதி, கொழும்பு-05
முதல் பதிப்பு : புரட்டாதி 2018
பக்கங்கள் : xiv + 70
அச்சுப் பதிப்பு : குமரன் அச்சகம்
39, 36 வது ஒழுங்கை, கொழும்பு-06
தொலைபேசி. 011-2364550

***Porththukkeyar Aliththa Benthottai***
***Kali Koyil***
*Author : N.K.S.Thiruchelvam*
*Copyright : N.K.S.Thiruchelvam* ©
*Publisher : Arunthathy Pathippakam*
*68/14, Sri Siddhartha Road, Colombo-05*
*First Edition : September 2018*
*No of Pages : xiv + 70*
*Printed by : Kumaran Printers*
*39, 36th Lane, Colombo-06*
*Tel. 011-2364550*

***Price : Rs. 325.00***
***ISBN NO : 978-955-3726-02-5***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் எழுதிய நூல்கள்

1. தென்னிலங்கையின் புராதன இந்துக் கோயில்கள்
2. பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரையும், கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும்
3. கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும், முனிவர்களும்
4. தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு
5. இலங்கையில் இராவணன் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள்
6. இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்
7. புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்
8. யார் இந்த இராவணன்?
9. போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளிகோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சென்னைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பட்ட தாரியான திரு.என்.கே.எஸ்.திருச்செல்வம் எழுதிய மற்றுமொரு நூலான **போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளி கோயில்** எனும் நூலுக்கு அணிந்துரை வரைவது பெருமையையும், பெரு மகிழ்வையும் தருகிறது. இவர் ஏற்கனவே இலங்கையிலுள்ள இந்துக் கோவில்கள் பலவற்றையும், இந்துசமய வரலாற்றின் சில பகுதிகளையும், இராவணன் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் மற் றும் சித்தர்கள் முனிவர்கள் தொடர்பான விடயங்கள் ஆகியன வற்றையும் எட்டு நூல்களாக எமக்கு அளித்துள்ளதையும், அவற்றுக்காக இலங்கை இலக்கியப் பேரவை விருது, நுழைபுலம் ஆய்வு விருது, தமிழியல் விருது, வித்தகர் விருது, வரலாற்று ஆய்வு கேசரி விருது மற்றும் சிங்கை இளவரசரால் **"தமிழ் மாமணி"** பட்டம் வழங்கிக் கௌவிக்கப்பட்டதும் நமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

சிவபூமியாகிய இலங்கையின் பல பாகங்களில் இந்துக் கோவில்கள் பல இருந்ததாகவும், அக்கோவில்களுக்கு இந்து க்கள் அல்லாதவர்களும் பயபக்தியோடு சென்று வழிபட்டதாக வும் பல தகவல்கள் அவ்வப்போது கிடைத்துள்ளன. ஆங்கிலே யருக்கு முன்பாக காலத்துக்குக் காலம் இலங்கை மீது படை யெடுத்த பிறநாட்டினர் தமது சமயத்தைப் பரப்புவதற்காக இந் துக் கோவில்களை அழித்துச் சிதைத்தோடு, இந்து மதத்தைப் பின்பற்றியோரையும் சித்திரவதை செய்து, கொடுமைப் படுத்தி யும், அற்ப சொற்ப சலுகைகளைக் கொடுத்தும், பலவந்தமாக மதமாற்றமும் செய்தனர். இது மட்டுமல்ல இடையிடையே நாட் டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினாலும், மதவெறியர்கள் சிலர் மற்றும் இனவாதிகள் சிலரால் மேற்கொள்ளப்பட்ட அநியாய நடவடிக்கைகளாலும் நமது ஆலயங்கள் பகுதியா கவோ, அன்றி முழுமையாகவோ பாதிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் நியமித்த அமைச்சர்களாலும், தெய்வநம்பிக்கை கொண்ட சிலராலும் இந்து ஆலயங்கள் தொடர்பாக புனருத்தாபன, புனர் நிர்மாண மற்றும் புதிய நிர்மாண நடவடிக்கைகள் மேற் கொள் ளப்பட்டாலும் அந்நடவடிக்கைகள் முழுமை அடைந்துள்ளன என்றோ அல்லது திருப்தியளித்துள்ளன என்றோ குறிப்பிட முடியாத நிலை தொடர்கிறது. இந்நிலையில் இவ்விடயம் தொடர் பான வரலாறுகளை ஆதாரங்களுடன் தேடித் தொகுக்கவும், ஆக் கங்கள் மூலம் அபிப்பிராயம் தெரிவிக்கவும் யாரும் முன்வருவ தில்லை. இவ்விடயங்கள் தொடர்பாக இடையிடையே ஏதேதோ வெல்லாம் வெளிப்படுத்தப்பட்டாலும் அவை எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இல்லை.

கற்பனையாக கருவூலங்கள் படைப்பது வேறு. ஆனால் வரலாறு எழுத போதியளவு தகவல்களும் தரவுகளும் சேக ரித்தாக வேண்டும். தேடல்கள் ஒருபுறமிருக்க களங்களுக்கு நேரில் சென்று விடயங்களை தெரிவிக்கக் கூடியோருடன் தொட ர்பை ஏற்படுத்துவதும், ஆதாரங்களைத் தேடி கால ஒழுங்கில் அல்லது விடய ஒழுங்கில் தொகுப்பதும் எல்லோருக்கும் எளிதில் முடியாது. அது மட்டுமல்ல. சில விடயங்களை தெரிவிக்க அது வும் எழுத்துமூலம் பதிவாக்க அவதானம், ஆழ்ந்த அறிவுக்கும் அப்பால் நெஞ்சுரமும், நேர்மையும், எவருக்கும், எதற்கும், அஞ்சாத துணிச்சலும் அவசியம். இவையெல்லாம் நிரம்பப் பெற்றவராக நூலாசிரியர் திருச்செல்வத்தைக் காண முடிகிறது.

ஏதோ ஒருவகையில் அழிந்த அல்லது அழிக்கப்பட்ட ஆல யங்கள் புதுப்பிக்கப்படுவதோ அல்லது திருத்தப்படுவதோ மிக மிக அவசியமாகின்றது. அதன் பின்னரும் ஆலயங்களை உரிய முறையில் பராமரிப்பதும் ஒழுங்காகப் பேணுவதும் அவசிய மாகின்றது. இந்தப் பெரும்பணி தனியொரு மனிதனாலோ அல் லது வளங்கள் இல்லாத அமைப்பாலோ செயற்படுத்துவது சிரமமான காரியமாகும். பலம் பொருந்திய மக்கள் பிரதிநிதி களின் குறிப்பிடக்கூடிய பங்களிப்பும், அவ்வவ் ஆலயங்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பானவர்களின் உற்சாகமான ஒத்துழைப்பும் இப்பெரும் பணிக்கு அவசியமாகிறது.

**"தமிழ்மாமணி"** திருச்செல்வம் கிழக்கிலங்கை அம்பாறை யில் பிறந்தாலும் சுமார் 35 வருடங்களாக தலைநகர் கொழு ம்பை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர். இவரது பெற்றோரான கல்யாணசுந்தரம்-இராமக்காள் இந்தியாவில் தமிழ்நாட்டையும், இலங்கையில் திருகோணமலையையும் சேர்ந்தவர்கள் என்பதுடன், இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் கலைமாணிப் பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆடை உற்பத்தித்தொழிற்சாலை ஒன்றில் பொது முகாமையாள ராகப் பணியாற்றும் ஆய்வாளர் திருச்செல்வம் வரலாற்றுத் துறையிலும், தமிழ்த் திரைப்படத் துறையிலும் கொண்ட ஈடு பாட்டால் 200க்கும் அதிகமான வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று பலராலும் பாராட்டப் பெற்றவர். கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராக இருப்ப துடன் முன்னணியிலுள்ள சமூக,சமய அமைப்புகளிலும் பொறுப்பு மிக்க பதவிகளை வகித்து வருகிறார்.

தமிழ்-சைவசமயம்-தமிழ்க்கலைகள் தொடர்பான ஆழமான அறிவுத் தேடலும், அவற்றைத் தெளிவாக விளக்கும் ஆற்றலும் இருப்பதால் திருச்செல்வம் இலங்கையின் பல பாகங்களில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற மாநாடுகள், கலந்துரையாடல்களிலும் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள விருப்புடன் அழைக்கப்பட்ட நம் நாட்டுப் பிரதிநிதியும் ஆவார். கொழும்பு கம்பன் கழகத்தின் **"நுழைபுலம் ஆய்வு விருது"** பெற்ற திருச்செல்வம் தொடர்ந்து தேடல் மற்றும் வரலாற்று ஆய்வுகள் மூலமான முடிவுகளைப் பதிவுகளாக்கி, அவற்றால் பயனுறு பணிகள் பல ஆற்றிட அவரைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**"கலா கீர்த்தி" உடுவை.எஸ்.தில்லை நடராசா**<br>
மேனாள் அரசாங்க அதிபர்<br>
கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையில் கடந்த 30 வருட யுத்தத்தின் போது வடக்கு, கிழக்கு பகுதிகளில் இருந்த சில சைவக் கோயில்கள் அழிக்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்ற பின்பு, வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இருந்த மிகப்பழமை வாய்ந்த சில சைவ வழிபாட்டுத்தலங்கள் பௌத்த பிக்குகள் சிலரால் பௌத்த வழிபாட்டுத் தலங்கள் என உரிமை கொண்டாடப்படுகின்றன. இதற்கு வலுசேர்க்கும் வகையில் இவை பௌத்த தொல்பொருள் சின்னங்கள் நிறைந்த இடங்கள் எனவும், இதனால் தமிழர்கள் இங்கு எந்தவித கோயில் கட்டுமானப் பணிகளிலும் ஈடுபடக் கூடாது எனவும் கூறி இலங்கைத் தொல்பொருள் திணைக்களமும் தமிழர்களின் ஆலய வழிபாட்டிற்கு நெருக்கடிகள் கொடுத்து வருகின்றமை ஊடகங்கள் மூலம் நாம் அறியும் விடயமாகும்.

திருகோணமலை மாவட்டத்தில் கன்னியா சிவன் கோயில், இலங்கைத்துறை கல்லடி நீலியம்மன் கோயில், மத்தல மலை முருகன் கோயில், மட்டக்களப்பு மாவட்டத்தில் குசலானமலை முருகன் கோயில், கச்ச கொடிமலை முருகன் கோயில், அம்பாறை மாவட்டத்தில் சங்கமன் கண்டி மலை முருகன் கோயில், கண்ணகிபுரம் முருகன் கோயில், வவுனியா மாவட்டத்தில் வெடுக்குநாரிமலை சிவன் கோயில் போன்றவை இவற்றில் சிலவாகும்.

இந்நிலையில் சிங்கள பௌத்தர்களே சைவக் கோயில்களை அழித்து அங்கு புத்தர் சிலைகளை வைக்கிறார்கள் எனும் கருத்து தமிழர்களிடையே பரவலாக நிலவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேசமயம் பண்டைய காலம் முதல் தமிழ் மன்னர்களும், பௌத்த சிங்கள மன்னர்களும், அரசப் பிரதானிகளும் கட்டிய கோயில்களை, ஐரோப்பாவில் இருந்து இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் தான் பெருமளவில் அழித்தார்கள் என வரலாற்று நூல்கள் கூறுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கில் இவர்கள் அழித்த கோயில்கள் ஆயிரத்துக்கும் அதிகம் எனத் தெரிகின்றது. தென் இலங்கையில் நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்களும், சில பௌத்த விகாரைகளும் இவர்களால் அழிக்கப்பட்டன. இவர்களின் பின் வந்த ஒல்லாந்தரும் இதேபோல் ஆலய அழிப்பில் ஈடுபட்டனர்.

இந்நாசகார நடவடிக்கைகளுக்கு முக்கிய காரணம், தமது கிறிஸ்தவ சமயத்தை இலங்கை மக்களிடையே பரப்ப வேண்டும் எனும் நோக்கமும், கோயில்களில் காணப்படும் பாரிய கற்றூண்களைக் கொண்டு தமது பாதுகாப்பிற்காக கோட்டைகளைக் கட்ட வேண்டும் எனும் நோக்கமுமாகும். அத்துடன் கோயில்களை இடித்து, அழித்து அதன் மீது கிறிஸ்தவ தேவாலயங்களையும் கட்டினர். வடக்கு கிழக்கில் இவ்விதம் ஐரோப்பியர்களால் இடித்து அழிக்கப்பட்ட கோயில்கள் ஆங்கிலேயர் காலத்தில் மீண்டும் கட்டப்பட்டன.ஆனால் தென்னிலங்கையில் அழிக்கப்பட்ட சில கோயில்கள் “தேவாலய” என மாற்றம் பெற்று பௌத்த மக்களால் வணங்கப்படுகின்றன. அதேசமயம் பல கோயில்கள் மீண்டும் கட்டப்படாமல் மண்ணுள் புதையுண்டு கிடக்கின்றன. இவ்வாறு மீண்டும் கட்டப்படாமல் புதைந்து கிடக்கும் கோயில்களில் ஒன்றே பெந்தோட்டையில் அமைந்திருந்த பிரசித்தி பெற்ற காளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலாகும். சுமார் 700 வருட வரலாற்றைக் கொண்ட இக்காளிகோயில் பொ.ஆ. 12 ஆம் நூற்றாண்டில் கட்டப் பட்டது. பின்பு சுமார் 400 ஆண்டுகளின் பின், 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப் பட்டது. அதன் பின் 300 வருடங்களாக சிதைந்து கிடந்த இக்கோயிலை 1884ஆம் ஆண்டு ஆர்த்தர் ஜெயவர்தன எனும் ஆராய்ச்சியாளர் மீண்டும் கட்டி எழுப்ப முயற் சிகள் மேற்கொண்டார். இருப்பினும் அவரது முயற்சி தோல்வியில் முடிந்தது. கோயில் மீண்டும் கட்டப்பட வில்லை.

இந்நிலையில் கடந்த 20 வருடங்களாக தமிழர் மற் றும் இந்து சமயம் தொடர்பான ஆய்வுகளில் நான் ஈடு பட்டிருந்த பொது, சில சைவக் கோயில்கள் வடக்கு, கிழக்கில் மண்ணுள் மறைந்து கிடப்பதையும், தென்னில ங்கையில் பல சைவக் கோயில்கள் அடையாளம் தெரியா மல் புதைந்து கிடப்பதையும் அறிய முடிந்தது. இவ்வாறு புதைந்து கிடக்கும் எமது கோயில்களை மீண்டும் கட்டி யெழுப்பி,இலங்கை முழுவதிலும் வாழ்ந்த தமிழரின் பாரம் பரியமிக்க அடையாளங்களை நிலை நிறுத்த வேண்டும் எனும் நோக்கத்தில் இந்நூலை எழுதியுள்ளேன். சக்தியுள்ள தமிழ் அரசியல் தலைவர்கள் இவ்விடயத்தைக் கையிலெடு த்து, அழிந்து போன நம் காளி கோயிலை மீண்டும் கட்டி யெழுப்பி, தென்னிலங்கையில் தமிழரின் அடையாளத்தை நிலை நிறுத்தி, பாதுகாக்க வேண்டும் என இந்நூல் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

**என்். கே. எஸ். திருச்செல்வம்** - *B.A*-வரலாற்றுத்துறை
புரட்டாதி 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

அறிமுகம் ........ 4

பெந்தோட்டை காளி கோயிலின் அமைவிடமும், அதன் தொன்மையும் ........ 8

பெந்தோட்டை காளி கோயிலைக் கட்டிய மன்னர்களும்,திருப்பணிகளும் ........ 23

பெந்தோட்டை காளி கோயிலை முற்றாக இடித்து அழித்த போர்த்துக்கேயர் ........ 28

பெந்தோட்டை காளி கோயிலின் தொல்பொருள் சின்னங்கள் ........ 30

சந்தேச நூல்களில் பெந்தொட்ட காளி கோயில் ........ 49

பெந்தோட்டையில் தமிழர் தொடர்பான கல்வெட்டு ........ 52

பெந்தோட்டையில் விநாயகர் மற்றும் விஷ்ணு வழிபாடு ........ 56

பெந்தோட்டை காளி கோயிலை மீண்டும் கட்டியெழுப்ப மேற்கொள்ளப்பட்ட முயற்சி ........ 62

பெந்தோட்டை காளி கோயில் மீண்டும் கட்டப்பட வேண்டும் ........ 65

உசாத்துணை நூல்கள் ........ 68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கங்கள்

பொ.ஆ - பொது ஆண்டு (கி.பி)

பொ.ஆ.மு - பொது ஆண்டுக்கு முன் (கி.மு)

*JRASCB - Journal of the Royal Asiatic Society of Ceylon Branch*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பண்டைய வரலாற்று சின்னங்களையும், அடையாளங்களையும் பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

**தமிழ் மக்களே! பக்தர்களே! ஆலய நிர்வாகிகளே! உங்களுக்கு ஓர் வேண்டுகோள்!**

பண்டைய தமிழர்களின் வரலாற்றையும், பண்பாட்டையும், கலாசாரத்தையும் அறிந்து கொள்வதற்கு, சான்றுகளாக விளங்குபவை கல்வெட்டுக்களும், தொல்பொருள் சின்னங்களும், பண்டைய நூல்களுமே. இவற்றில் கல்வெட்டுக்களும், தொல்பொருள் சின்னங்களும் மிகமுக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இவற்றை பாதுகாத்து எம் வரலாற்றைப் பறைசாற்றும் கருவூலங்களாக விளங்குபவை எமது பண்டைய கோயில்களே.

எமது கோயில்களில் காணப்படும் தெய்வச் சிலைகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், கற்தூண்கள், சிற்பங்கள், ஓவியங்கள், பண்டைய நாணயங்கள் போன்றவையே எமது பண்டைய வரலாற்றைக் கூறும் அரிய பொக்கிஷங்களாகும். இவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். நம் கோயில்களில் உள்ள சிறிய கருங்கல் துண்டு கூட நமது வரலாற்றைக்கூறும் பொக்கிஷங்களில் ஒன்றாகவே காணப்படுகின்றது.

எனவே தயவுசெய்து இவற்றை குப்பைகளில் போட வேண்டாம். மண்ணிற்குள் புதைத்து அதன் மீது மாபிள், கொங்ரீட், சீமெந்து இட்டு மறைக்க வேண்டாம்.இவற்றை உங்கள் கோயில் வளவிற்குள் ஓர் சீமெந்து மேடைய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்து அதில் நட்டு வையுங்கள். உங்கள் வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையில் இதன் காலத்தையும், விபரத்தையும் ஒரு பெயர்ப் பலகையில் எழுதி வையுங்கள். இதுவே நீங்கள் எமது வரலாற்றுச் சின்னங்களையும், அடையாளங்களையும் பாதுகாப்பதற்கு செய்ய வேண்டிய கடமையாகும்.

மிக்க நன்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெந்தோட்டை காளி கோயில், பெந்தோட்டை கங்கை ஆகியவற்றைக் குறிக்கும் தேசப்படம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

பண்டைய தமிழர்களின் வரலாற்றையும், பண்பாட்டையும், கலாசாரத்தையும் அறிந்து கொள்வதற்கு சான்றுகளாக விளங்குபவை கல்வெட்டுக்களும், தொல்பொருள் சின்னங்களும், பண்டைய நூல்களுமே. இவற்றில் கல்வெட்டுக்களும், தொல்பொருள் சின்னங்களும் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இவற்றை பாதுகாத்து எம் வரலாற்றைப் பறைசாற்றும் கருவூலங்களாக விளங்குபவை எமது பண்டைய கோயில்களே.

இலங்கையில் எமது கோயில்களை தமிழ் மன்னர்கள் மட்டுமல்லாது, சிங்கள மன்னர்களும் அதிகளவில் கட்டியுள்ளனர் என்பதை வரலாற்று நூல்கள் மற்றும் கல்வெட்டுக்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. பொ.ஆ.2ஆம் நூற்றாண்டில் சேர நாட்டுக்கு சென்று திரும்பிய கஜபாகு மன்னன் யாழ்ப்பாணம், மடு, அனுராதபுரம் உட்பட இலங்கையின் பல பகுதிகளில் கண்ணகியம்மன் கோயில்களை அமைத்தான் என குறிப்புகள் கூறுகின்றன. சோழர் காலத்தில் அனுராதபுரத்திலும்,பொலநறுவையிலும் பல கோயில்கள் கட்டப்பட்டன. சோழர் காலத்தின் பின் வந்த விஜயபாகு, ஜயபாகு ஆகிய மன்னர்கள் பல கோயில்களைக் கட்டியதாக சூளவம்சமும், கல்வெட்டுகளும் கூறுகின்றன.

பொலநறுவை இராச்சிய காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த முதலாம் பராக்கிரமபாகு 37 கோயில்களைக் கட்டிய தோடு, 79 கோயில்களை புனரமைத்தான் என சூளவம்சம் கூறுகிறது. மொத்தமாக இலங்கை முழுவதிலும் 116 சைவக்கோயில்களுக்கு இவன் திருப்பணிகள் செய்துள்ளான். மேலும் 2ஆம் விக்ரமபாகு, 1ஆம் தப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லன், 2ஆம் மகிந்தன், 2ஆம் பராக்கிரமபாகு, மானாபரணன், தம்பதேனிய விஜயபாகு ஆகிய மன்னர்கள் கோயில்களைக் கட்டியதாக சூளவம்சம் கூறுகிறது. 4ஆம் விஜயபாகு, முதலாம் சேனன், 4ஆம் பராக்கிரமபாகு, 4ஆம் புவனேகபாகு, 3ஆம் விக்ரமபாகு, 5ஆம் புவனேகபாகு ஆகிய மன்னர்களும் சைவக்கோயில்களைக் கட்டியதாக ரோயல் ஆசியாக் கழகத்தின் குறிப்புகள் கூறுகின்றன. சீதாவாக்கை இராஜசிங்க மன்னன் 100 க்கும் மேற்பட்ட பத்தினி அம்மன் கோயில்களை கட்டியதாகவும், கோட்டை இராச்சியத்தின் மன்னன் 6ஆம் பராக்கிரமபாகு தனது இராச்சியத்தில் பல இந்துக் கோயில்களைக் கட்டியதாகவும் வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன.

## இலங்கைத் தமிழரின் வரலாறு, அடையாளம் ஆகியவற்றை முற்றாக அழித்த ஐரோப்பியர்

இலங்கையில் தமிழ் சைவ மன்னர்களும், சிங்கள பௌத்த மன்னர்களும் கட்டிப் பராமரித்து வந்த கோயில்களை இடித்தழித்து, தமிழர் வரலாற்றின் அடையாளங்களில் ஒன்றுகூட இல்லாத அளவிற்கும்,பண்டைய கோயில்களில் ஒன்றுகூட முழுமையாக இல்லாத அளவிற்கும் நாசம் புரிந்த பெருமைக்குரியவர்கள், கிறிஸ்தவ சமயத்தை தமிழர்களிடையே பரப்பி, அவர்களை மதம் மாற்றும் நோக்கத்துடன் செயல்பட்ட ஐரோப்பிய வெள்ளையர்களே என்பது குறிப்பிடத்தக்கது. இன்று இலங்கைத் தமிழர்கள் தம் வரலாற்றையும், அடையாளங்களையும் முற்று முழுதாக தொலைத்து விட்டு, தம் உரிமைக்காக தினம் தினம் போராடும் நிலைமைக்கு தள்ளிவிட்டதே இந்த ஐரோப்பிய கிறிஸ்தவ வெள்ளையர்களே என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழர்களின் வரலாற்றைக் கூறும் பண்டைய கோயில் ஒன்று கூட முழுமையாக இல்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். இலங்கைத் தமிழருக்கு 3000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு இருந்தும் அவற்றைக் கூறும் பண்டைய சின்னங்களைப் பாதுகாத்து வந்த கோயில்கள் எதுவும் இல்லை என்பது நாம் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயமாகும். 1000 வருடங்களுக்கு முன்பு சோழர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களிலும் கூட முழுமையான ஓர் கோயில் இல்லை என்றே கூறலாம். இதற்குக் காரணம் ஐரோப்பியரின் ஆக்கிரமிப்பும், மத ரீதியிலான ஆலய அழிப்புமாகும். பொ.ஆ. 1505 ஆம் ஆண்டு இலங்கையில் காலடி வைத்த போர்த்துக்கேயரே இந்த ஆலய அழிப்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்தவர்களாவர். அவர்களுக்குப் பின் வந்த ஒல்லாந்தரும் இதே நாசகார நடவடிக்கையை சத்தமில்லாமல் செய்தவர்களாவர். போர்த்துக்கேயரின் அட்டூழியத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான சைவக்கோயில்கள் உருத்தெரியாமல் அழிக்கப்பட்டன. பின்பு வந்த ஒல்லாந்தராலும் பல கோயில்கள் அழிக்கப்பட்டன.

பொதுவாக பௌத்த மதத்தை சேர்ந்த சிங்களவர்களே சைவக் கோயில்களை அழித்தார்கள் எனும் கருத்தே தமிழர்களிடையே நிலவுகிறது. ஆனால் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த ஐரோப்பியர்களே ஆயிரக்கணக்கான சைவக் கோயில்களை அழித்தார்கள் எனும் உண்மை மூடி மறைக்கப்பட்டுள்ளது. இவர்களின் கிறிஸ்தவ மதத்தை இலங்கையில் உள்ள தமிழ் மக்களிடையே பரப்புவதற்காகவும், எமது கோயில்களில் காணப்பட்ட பாரிய கற்தூண்களைக் கொண்டு தமது பாதுகாப்புக்காகக் கோட்டைகளைக் கட்டுவதற்காகவும் தான் ஆயிரக்கணக்கில் நம் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை இவர்கள் இடித்து அழித்தார்கள். இவ்வாறு போர்த்துக்கேயர் அழித்த சைவக்கோயில்கள் பற்றிய விபரங்களை பாதிரியார் பெர்னோ டி குவைறோஸ் **1687** ல் தான் எழுதிய *"The Temporal and Spiritual Conquest of Ceylon"* எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் அழித்த கோயில்களைக் கட்டியவர்கள் தமிழ் மன்னர்களும், அரசப் பிரதானிகளும் மட்டுமல்ல, பௌத்த சிங்கள மன்னர்களுமே. தமிழர்களைவிட பௌத்த சிங்கள மன்னர்களே அதிகமான சைவக் கோயில்களைக் கட்டியுள்ளனர் என்பது மேற்கூறப்பட்டுள்ள விடயங்கள் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

***2000, 1000*** வருட பழமைமிக்க நம் வரலாற்றையும், அடையாளங்களையும் பறைசாற்றும் புராதன கோயில்களை அழித்து, நம் வரலாற்றைக் கேள்விக்குறியாக்கிய வெள்ளையர்கள் பெந்தோட்டையில் அமைந்திருந்த புராதன காளி கோயிலையும் இடித்தழித்துள்ளனர்.


போர்த்துக்கேயர் அழித்த கோயில்களில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் அழிக்கப்பட்ட கோயில்கள் மீண்டும் கட்டப்பட்டுள்ள நிலையில்,தென்னிலங்கையில் அமைந்திருந்த பெந்தோட்டை காளி கோயில் மீண்டும் கட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பண்டைய காலத்தில் தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர்களின் அடையாளமாகத் திகழ்ந்த பெந்தோட்டை காளி கோயில் மீண்டும் கட்டப்படுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெந்தோட்டை காளி கோயிலின் அமைவிடமும், அதன் தொன்மையும்

கொழும்பிலிருந்து காலிக்குச் செல்லும் வீதியில் சுமார் 60 கி.மீ. தொலைவில் உள்ள பெந்தோட்டை பாலத்தை அடுத்து பெந்தொட்டை நகரம் அமைந்துள்ளது. இன்று வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் அழகிய கடற்கரைகளைக் கொண்ட சுற்றுலாத் தலமாக விளங்கும் பெந்தோட்டை, பண்டைய காலத்தில் இந்துக்களின் ஓர் முக்கிய வழிபாட்டுத் தலமாகக் காணப்பட்டது.




**பெந்தோட்டை காளி கோயில் மற்றும் ஏனைய இடங்களைக் குறிக்கும் தேசப்படம்**

இந்நகரின் வடக்கு, தெற்கு, கிழக்குப் பகுதிகளில் பல இந்துக் கோயில்கள் அமைந்திருந்தன. இவற்றில் ஒன்றே பெந்தொட்டை காளி கோயிலாகும். பெந்தொட்டை நக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் கிழக்குப் பக்கத்தில் சுமார் 2 கி.மீ தூரத்தில் உள்ள யாத்ராமுல்ல என்னுமிடத்தில் தான் இக்காளி கோயில் அமைந்திருந்தது.

## பெந்தொட்டை தீவு

பெந்தொட்ட பகுதி பெந்தொட்ட நகரம், அங்க கொட, யாத்ராமுல்ல மேற்கு, யாத்ராமுல்ல கிழக்கு, தோப்பே ஆகிய இடங்களை உள்ளடக்கிய இடமாகும். பெந்தொட்ட கங்கையினால் மூன்று பக்கங்களும் சூழப் பட்ட இப்பகுதியின் வடக்கு முனையில் பெந்தொட்ட கங்கை கடலில் சங்கமித்து இப்பகுதியை பெருநிலப்பரப் புடன் துண்டிக்கிறது. தெற்குப் பக்கத்தில் தாழ்ந்த நிலப் பகுதியில் ஆற்று நீர் நிரம்பி ஓர் இயற்கையான குளத்தை உருவாக்கியுள்ளது.


இப்பகுதியிலிருந்து "யக்கஹகல" என்னுமிடத்தின் ஊடாக கடல்வரை வெட்டப்பட்டிருந்த அத்துருவெல்ல கால்வாய் மூலம் மேலதிக நீர் கடலுக்குப் போய்ச் சேர்கி றது. இக்கால்வாய் வெட்டப்பட்டதன் மூலம் பெந் தொட்டை ஓர் தீவாக மாறியுள்ளது. இப்பகுதி புராதன காலந்தொட்டு பல பெயர்களில் அழைக்கப்பட்டு வருகி றது. பிமதித்த, பெம்தொட்ட, பெந்தர, பெந்தொட்ட என்றும், சில ஆய்வாளர்களால் பெருந்துறை, பெருந் தோட்டை, பெண்துறை, பெண்தோட்டை எனவும் இவ் விடத்தைக் குறிப்பிட்டு வருகின்றனர். இப்பெயர்கள் அமையப் பெற்றதற்கு வெவ்வேறு காரணங்கள் கூறப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யக்ஷி காத்துவந்த அபாயகரமான ஆற்றுத்துறை

மிகப்புராதன காலத்தில் பெந்தொட்ட கங்கையில் ஆற்றைக் கடக்கும் இடத்தில் ஓர் துறை இருந்ததாகவும் பலரைக் காவு கொள்ளும் இப்பகுதியை ஓர் பெண் அரக்கி காத்து வந்ததாகவும் இதன் காரணமாக இத்துறை "பிமதித்த" எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது. பிமதித்த எனும் பாளி வடிவத்தின் பொருள் "அபாய கரமான துறை" என்பதாகும். இவ்விடத்தைக் காத்துவந்த அரக்கியை இயக்கி எனவும், யக்ஷி எனவும் அழை ப்பதுண்டு.



**பெந்தோட்டை கங்கை**

சிவபக்தன் இராவணனின் தங்கை சூர்ப்பனகை ஓர் இயக்கி என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையின் பூர் வீகக் குடிகளான இயக்கர்களை யக்ஷர்கள் அல்லது அரக் கர்கள் எனவும் குறிப்பிடுவர். இதன்படி பெருந்தொட்டை படகுத்துறை பண்டைய காலத்தில் ஓர் பெண் யக்ஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினால் பாதுகாக்கப்பட்டு வந்த இடம் என கர்ண பரம் பரையாகக் கூறப்படுகிறது.

## தக்கிண்ண தேசத்தின் தென் எல்லை

புராதன காலத்தில் பெந்தொட்ட துறை யக்ஷியினால் பாதுகாக்கப்பட வேண்டிய அளவிற்கு முக்கியத்துவம் பெற்றிருந்த மைக்கு பல முக்கிய காரணங்கள் உள்ளன. அன்றுமுதல் இன்றுவரை இந்த ஆறு ஓர் எல்லையாகவே அமைந்துள்ளமை ஓர் முக்கிய காரணமாகும்.




**கடலில் இணையும் அத்துருவெல்ல கால்வாய்**

பொ.ஆ 12ஆம் நூற்றாண்டில் மஹா பராக்கிரமபாகு மன்னன் ஆட்சியின் போது தக்கிண்ண தேசத்தின் தென் எல்லையாக பெந்தொட்ட கங்கை அமைந்திருந்தது. ஒல் லாந்தர் காலத்தில் கொழும்பு மாகாணத்தினதும் எல்லை யாக பெந்தொட்ட கங்கை அமைந்திருந்தது. ஆங்கிலேயர் காலத்தில் மேல் மாகாணத்தினதும், தென்மாகாணத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளதும் எல்லையாக பெந்தொட்ட கங்கை அமைந்ததோடு இன்றுவரை எல்லையாகவே விளங்குகிறது.



**பெந்தோட்டை பாலம்**

## இராவண இராச்சியத்தின் எல்லை

இது போன்று இராவணன் காலத்திலும் இராவண இராச்சியத்தின் எல்லையாக பெந்தொட்ட கங்கை அமை ந்திருந்தது எனக் கூறப்படுகிறது. தென்னிலங்கையே இராவ ணனின் முக்கிய ஆட்சிப் பகுதியாக விளங்கியமையும், இதன் பெரும்பகுதி கடற்கோளினால் காவு கொள்ளப் பட்டமையும், கதிர்காமத்திற்கு தெற்கில் உள்ள கடலில் காணப்படும் தீவுகள் கடலால் கொள்ளப்பட்ட இராவண இராச்சியத்தின் உயர்ந்த பகுதிகள் எனவும் வரலாற்று நூல்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இந்த இரா வண இராச்சியத்தின் வடமேற்கின் நுழைவாயிலாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெந்தொட்ட துறை அமைந்திருந்ததாகவும், இவ்விடத்தில் அடிக்கடி போர் நடப்பதாகவும், எதிரிகள் தரைவழியாக நுழையும் முக்கிய இடமாக இது அமைந்திருந்ததாகவும், இதனால் யக்ஷியின் பாதுகாப்பில் இப்பகுதி இருந்ததாக வும் கூறப்படுகிறது. பராக்கிரமபாகு மன்னன் காலத்திலும் இவ்விடத்தில் அடிக்கடி போர் நடப்பதுண்டு. ரோகன நாட்டிலிருந்து தக்கிண்ண தேசத்திற்கு ஊடுருவும் எதிரிகள் பலர் இவ்விடத்தில் பலியாகியுள்ளனர். இதன் காரண மாகவே இது "அபாயகரமான துறை" எனப் பெயர் பெற்றுள்ளது.

## காளி வழிபாடாக மாறிய யக்ஷி வழிபாடு

பெந்தொட்டை பற்றி கூறப்படும் இக்கர்ண பரம்ப ரைக் கதைக்கும், இங்கிருந்த காளியம்மன் வழிபாட்டிற்கும் நெருங்கிய தொடர்புள்ளமை தெரியவருகிறது. புராதன காலத்தில் யக்ஷியினால் பாதுகாக்கப்பட்டு வந்த இவ் விடத்தில் யக்ஷி காவல் தெய்வமாக உறைந்தாள் எனக் கூறப்படுகிறது. இங்கிருந்த மக்களுக்குப் பாதுகாப்பாகவும், இவ்விடத்திற்குப் பாதுகாப்பாகவும் இப்பெண் தெய்வம் விளங்கியது எனலாம். இந்த யக்ஷி வழிபாடே பிற்காலத் தில் இவ்விடத்தில் காளி வழிபாடாக மாறியது எனக் கூறக்கூடியதாக உள்ளது.

## யக்ஷி வழிபாடு பற்றி வேதாசலத்தின் குறிப்பு

இந்தியாவில் தோற்றம் பெற்ற மிகத் தொன்மைமிக்க வழிபாடே யக்ஷி, யக்ஷ வழிபாடு என்பதை தமிழ்நாட் டின் தொல்பொருள் ஆய்வாளர் வேதாச்சலம் தனது ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளமை இங்கு முக்கியமாக நோக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தக்கது. இத்தெய்வங்கள் உறையும் இடங்களாக நீர் நிலைகள், மலைகள், மரங்கள் போன்றவை விளங்குவ தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இத்தெய்வங்களில் யக்ஷி எனும் இயக்கி வழிபாடே பின்பு தாய்தெய்வ வழி பாடா கவும் மாறியது எனவும், இத்தெய்வத்தை நன்மைக்கும், செல்வத்திற்கும், உடல் நலத்திற்கும், மகப்பேற்றிற்கும் மக் கள் வழிபட்டனர் எனவும் வேதாசலம் குறிப்பிட்டுள்ளார்.





**அனுராதபுரத்தில் காணப்படும் யக்ஷி சிலைகள்**

## யக்ஷி வழிபாடு பற்றி பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்

யக்ஷி வழிபாடே பிற்காலத்தில் காளி, லட்சுமி போன்ற தெய்வங்களின் வழிபாடாக மாறியது என்பதற் கான பல ஆதாரங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டைய அநுராதபுர நகரைப் பாதுகாத்த யக்ஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் புராதன காலத்தில் நிலவிய யக்ஷ தெய்வங்கள் பற்றியும் யக்ஷி வழிபாடு பற்றியும் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தனது நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். பண்டுகாபய மன்னன் காலத்தில் நகரத்தின் நாற்திசைகளிலும் உறைந்திருந்த வடவாமுகி, பச்சிமராஜினி மற்றும் பெயர் குறிப்பிடப்படாத மேலும் இரு யக்ஷி தெய்வங்கள் பற்றி பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். மகாவம்சத்திலும் இத்தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

## பெந்தொட்ட கங்கைக் கரையில் உருவமற்ற யக்ஷி வழிபாடு

நீர்நிலைகளில் யக்ஷ தெய்வங்கள் உறைந்திருந்தது பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாவலி கங்கைக்கு அருகில் தும்பரியங்கன எனும் குளத்தில் வசித்து வந்த யுதிந்திர எனும் யக்ஷி தெய்வம் பற்றிய குறிப்புகளும் உள்ளன. இதுபோலவே பெந்தொட்ட கங்கை கரையினில் குடிகொண்ட யக்ஷி இப்பகுதி மக்களால் காளியாக வழிபட்டு வந்தாள் எனக் கூறக்கூடியதாக உள்ளது. பொதுவாக யக்ஷ தெய்வங்கள் அவை உறைந்துள்ளதாகக் கருதப்படும் இடத்தில் உள்ள விருட்சத்தின் கீழ் உருவமற்ற நிலையிலேயே வழிபட்டன.

மரத்தின் கீழே கல்லினால் மேடையமைத்து அம்மேடையில் இத்தெய்வத்திற்கான பூஜைகள் நடத்தப்பட்டன. இதுபோலவே பெந்தொட்டை நதிக்கரையின் அருகில் இருந்த விசாலமான விருட்சத்தின் கீழ் பூஜைகள் நடத்தப்பட்டு பெந்தொட்டை துறையை காத்த யக்ஷிக்கு வணக்கம் செலுத்தப் பட்டதாக நம்பப்படுகிறது. இப்படி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மக்களால் மிகவும் பயபக்தியுடன் வழிபடப்பட்டு வந்த இந்த தெய்வத்திற்கே பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டில் கோயில் கட்டப்பட்டது.*

## உக்கிரகாளி குடிகொண்டிருந்த பீமதீர்த்தம்


*பெந்தொட்டை என்ற பெயரும், குடியிருப்பும் இங்கு புராதன காலத்தில் நிலவிய காளி வழிபாட்டின் காரண மாகவே தோற்றம் பெற்றதாக ஆய்வுகள் மூலம் தெரிய வருகிறது. உக்கிரகாளியாக கோரவடிவில் குடிகொண்டி ருந்ததால் இவ்விடம் "பீமதீர்த்தம்"என்ற பெயரில் அழைக் கப்பட்டது. "பீம்" என்றால் பயங்கரமானது எனப் பொருள்படும். இதுவே பீம்தொட்ட எனவும் பின்பு திரி படைந்ததாகவும், உக்கிரகாளி குடிகொண்டிருந்த இடம் "பெந்தொட்ட" எனவும் இங்கிருந்த நதி "பெந்தொட்ட கங்கை" எனவும் பெயர் பெற்றதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.*

## முதன் முதலில் காளி கோயில் அமைந்திருந்த இடம்

*புராதன காலத்தில் பெந்தொட்ட கங்கை தற்போது பெந்தொட்ட பாலம் அமைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு எதிரில் மேற்குப் பக்கத்தில் கடலில் சங்கமமானதாகவும் இவ்விடத்திலே தான் காளிகோயிலும் அமைந்திருந்ததாக வும் கூறப்படுகிறது. பின்பு இந்த முகத்துவாரம் மணலால் மூடப்பட்டதும் பெந்தோட்டை நதி வடக்கு நோக்கிப் பாய்ந்து சுமார் 2 கி.மீ தூரத்தில் உள்ள களுவாமோதர என்னுமிடத்தில் கடலுடன் சங்கமமாகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உக்கிரகாளி சிலை

இந்நதி முன்பு சங்கமமான இடத்திலிருந்து தற்போது கடலில் கலக்கும் களுவா மோதர என்னுமிடம் வரையான நிலப்பகுதி நதிக்கும், கடலுக்கும் இடையில் 150-200 மீற்றர் அகலத்தில் 2 கி.மீ நீளத்தில் பெருநிலப்பரப்புடன் தொடர்பு பட்டுள்ளது. இவ்வொடுங்கிய நிலப்பரப்பில் தான் தற்போது பல நட்சத்திர உல்லாச விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளி கோயிலும், பௌத்த விஹாரையும் இருந்த இடத்தில் ஒல்லாந்தர் கட்டிய கோட்டை


பெந்தொட்டை காளி கோயிலின் அமைவிடம் பற்றி வெவ்வேறு குறிப்புகளில் பல்வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது. தற்போது பெந்தொட்டை பாலம் அமைந்திருக்குமிடத்தின் மேற்கில் கடலை ஒட்டி இக்கோயில் அமைந்திருந்ததாகவும், வேறுசில குறிப்புகள் பெந்தொட்டையிலிருந்து யாத்ராமுல்ல என்னுமிடத்திற்குச் செல்லும் வீதியில் 500 மீற்றர் தூரத்தில் உள்ள மலைப் பாறையின் மீது காளி கோயில் அமைந்திருந்ததாகவும் கூறுகின்றன. இவ்விடத்தில் தான் ஒல்லாந்தர் காலத்தில் ஓர் கோட்டை கட்டப் பட்டதாகவும் தெரிய வருகிறது.

காளி கோயிலுடன் இங்கு பெந்தொட்ட விஹாரையும் அமைந்திருந்ததாகவும் போர்த்துக்கேயரால் இவ்வாலயங்கள் அழிக்கப்பட்ட நிலையில் அங்கு ஒல்லாந்தர் கோட்டை கட்டியதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இவ்விடம் உடகொட்டுவ என அழைக்கப் படுகிறது.

தற்போது இங்கு பெந்தொட்ட உடகொட்டுவ ரஜ மஹா விஹாரை அமைந்துள்ளது. இவ்விடத்தில்தான் புராதன பெந்தொட்ட கங்கையின் படகுத்துறை இருந்ததாகக் குறிப்புகள் கூறுகின்றன. காளிகோயில், பௌத்த விஹாரை ஆகியவற்றிற்காக பயன்படுத்தப்பட்ட புராதன கிணறு இன்றும் அடிவாரத்தில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடகொட்டுவ ரஜமஹா விஹாரை

## வெவ்வேறு காலப்பகுதியில் மூன்று இடங்களில் அமைந்திருந்த காளி கோயில்


*19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மேற்கொண்ட ஆய்வுகளின்படி பெந்தோட்டையிலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் உள்ள யாத்ராமுல்ல என்னும் இடத்தில், பெந்தொட்ட கங்கைக் கரையில் தான் காளி கோயில் அமைந்திருந்ததாகவும், பொ.ஆ. 15 ஆம் நூற்றாண்டில் இக்கோயிலும், இப்பகுதியில் இருந்த பௌத்த விஹாரைகளும் போர்த்துக்கேயரால் அழிக்கப் பட்டதாகவும் தெரியவருகிறது. மேற்கூறப்பட்ட குறிப்புகளின் படி பெந்தொட்டை காளிகோயில் புராதன காலத்தில் கடற் கரையை ஒட்டியும், பின்பு உடகொட்டுவ எனும் மலைப் பாறை மீதும், போர்த்துக்கேயர் காலத்தில் யாத்ராமுல்ல பகுதியிலும் அமைந்திருக்கலாம் என யூகிக்கக் கூடியதாக உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களுவாமோதர எனும் காளி முகத்துவாரம்

தற்போது பெந்தொட்ட கங்கை கடலில் சங்கமமாகும் இடமான களுவாமோதர எனும் பெயர் கூட காளி கோயில் அமைந்திருந்ததினால் ஏற்பட்ட காரணப் பெயராகும். காளி கோயில் நதியின் கரையில் அமைந்திருந்ததால் பெந்தொட்ட கங்கை "காளி நதி" என்ற பெயரைப் பெற்றிருந்தது. பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டில் தம்பதெனியாவை ஆட்சி செய்த 2 ஆம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் இவனது முதல் மந்திரியான தேவப்பிரதிராஜா என்பவன் காளி நதியின் குறுக்கே ஓர் பாலம் கட்டியது பற்றி சூளவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



**பெந்தோட்டை கங்கை கடலில் சங்கமமாகும் களுவாமொதர**

சூளவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காளிநதி களுத்துறையில் உள்ள களுகங்கையையே குறிப்பதாக சில ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். களுத்துறையில் களுகங்கைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையிலும் ஓர் காளிகோயில் அமைந்திருந்தமையும் குறிப் பிடத்தக்கது. எனினும், வேறு சில குறிப்புகளின் படி அக் காளிநதி பெந்தொட்ட கங்கையே எனக் கூறப்பட்டு ள்ளது.

காளி கோயில் கரையில் அமைந்திருந்ததால் பெந் தொட்ட கங்கை கடலில் கலக்கும் இடம் "காளிமோதர" என அழைக்கப்பட்டதாகவும் (மோதர என்பது முகத் துவாரம் எனப் பொருள்படும்) பின்பு அது களுமோதர எனவும் திரிபடைந்ததாகவும் கூறப்படுகிறது. இவ்விடத்தில் நதியுடன் சங்கமமாகும் ஓர் கிளை ஆறும் "களுவா மோதர எல" என அழைக்கப்படுகிறது.

## காளிகோயிலின் அருகில் நதியில் சங்கமமாகும் "காளி ஹோய" (காளி ஓடை)

காளி கோயில் அமைந்திருந்ததாகக் கருதப்படும் இட த்தில் பெந்தொட்ட கங்கையுடன் ஓர் சிற்றோடை சங்கம மாகிறது. இது "காளி ஹொய" என அழைக்கப்படுகிறது. ஹொய எனும் சிங்களச் சொல்லின் தமிழ் வடிவம் ஓடை என்பதாகும். எனவே இந்த ஓடையின் தமிழ்ப் பெயர் "காளி ஓடை" என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெந்தோட்டை காளி கோயிலைக் கட்டிய மன்னர்களும்,திருப்பணிகளும்

## இரண்டாம் பராக்கிரமபாகு கட்டிய ஆலயம்

*தம்பதெனியாவை முதன் முதலில் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மன்னனான 3 ஆம் விஜயபாகு வின் மகன் 2ஆம் பராக்கிரமபாகுவால் பெந்தொட்ட கங்கைக் கரையில் இக்காளி கோயில் கட்டப்பட்டதாக நூல்கள் கூறுகின்றன. இவன் தம்பதெனியாவை ஆட்சி செய்த, பொ.ஆ. 1236-1270 காலப் பகுதியில் இவ்வால யம் கட்டப்பட்டது.*

## தேவப்பிரதிராஜா காளி நதியின் குறுக்கே கட்டிய பாலம்

*சூளவம்சத்தின் 86 ஆவது அத்தியாயத்தில் 2ஆம் பராக்கிரமபாகுவின் முதல் மந்திரியான தேவப்பிரதிராஜா வுக்கு மன்னன் ஒப்படைத்த சில பணிகள் பற்றிக் குறிப் பிடப்பட்டுள்ளது. பாழடைந்து கிடக்கும் அத்தனகல விஹாரையை புனர்நிர்மாணம் செய்தல், நிஸ்ஸங்க மல்ல னால் பெந்தொட்ட விஹாரையில் அமைக்கப்பட்டு பின்பு கைவிடப்பட்ட பழத்தோட்டத்தை சீர் செய்தல் போன்ற பணிகள் ஒப்படைக்கப்பட்டன.*

*இதன்படி தேவப்பிரதிராஜா முதலில் அத்தனகலை க்குச் சென்று அங்கு தனது பணியை நிறைவு செய்து விட்டு பெந்தொட்டைக்கு வந்து அங்கு காளி நதியின் குறுக்கே 86 கியூபிட் நீளத்திற்கு ஒர் பாலத்தை அமைத் தான் எனவும், பின்பு கெசல்சேனாவ, சல்கமகங்க, சல் பிட்டி கோரளை ஆகிய இடங்களிலும் பாலங்கள் கட்டிய*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் மீண்டும் பெந்தோட்டைக்கு வந்து இங்கிருந்து களு கங்கை வரை ஒரு யோஜனை நீளத்திற்கு (சுமார் 12கி.மீ. நீளம்) தென்னந் தோட்டங்களை அமைத்தான் எனவும் சூளவம்சம் கூறுகிறது. இது நிகழ்ந்தது பொ.ஆ. 1239-1240 காலப்பகுதியில் எனத் தெரியவருகிறது. இக்கால கட்டத்தில் தான் கோயிலும் கட்டப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. சூளவம்சக் குறிப்பின்படி பெந்தொட்ட கங்கை அல்லது பெந்தொட்ட கங்கையின் ஓர் பகுதி (இறுதிப் பகுதி) இங்கிருந்த காளி கோயிலின் பெயரால் "காளி நதி" என்ற பெயரைப் பெற்று விளங்கியமை தெளிவாகத் தெரிகிறது.

## சிங்கள மன்னர்களில் அதிகமான இந்துக் கோயில்கள் கட்டிய முதலாம் பராக்கிரமபாகு

பெந்தொட்ட காளி கோயில் மிகப் புராதன காலத்தில் தோற்றம் பெற்றிருந்தாலும் கோயிலாக கட்டப்பட்டது பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டில் என்பதே அனைவரும் அறிந்த தகவலாக உள்ளது. இரண்டாம் பராக்கிரபாகு மன்னன் காலத்தில் காளி நதியின் குறுக்கே பாலம் கட்டிய தேவப்பிரதிராஜாவே காளி கோயிலைக் கட்டியதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

ஆனால், வேறு சில ஆய்வாளர்கள் இக்கோயில் 2 ஆம் பராக்கிரமபாகு காலத்தில் கட்டப்படுவதற்கு முன்பே முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர். முதலாம் பராக்கிரமபாகுவின் காலம் பொ.ஆ.. 1153 முதல் 1186 வரையாகும். 2 ஆம் பராக்கிரமபாகு பொ.ஆ. 1236 முதல் 1270 வரை ஆட்சி செய்தான். இருவருக்கும் இடையில் சுமார் 100 வருட வித்தியாசம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களில் அதிகப் படியான இந்துக் கோயில்களைக் கட்டிய மன்னன் முதலாம் பராக்கிரமபாகு என்பது குறிப்பிடத்தக்கது. இவனது ஆட்சிக் காலத்தில் *13* கோயில்களைக் கட்டியதாகவும், மேலும் *79* கோயில்களை இம்மன்னன் புனரமைத்ததாகவும், மேலும் *24* கோயில்களை புதிதாகக் கட்டியுள்ளதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இக்குறிப்புகளின்படி பராக்கிரமபாகு மொத்தமாக *116* கோயில்களை நிர்மாணித்துள்ளான் எனத் தெரிகிறது. ஏற்கனவே சிறிய கோயில்களாக இருந்தவை பெரிதாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனவும் நம்பப்படுகிறது. இந்த *116* கோயில்களில் பெந்தொட்ட காளி கோயிலும் ஒன்று என நம்பப்படுகிறது. இதற்கு சில காரணங்கள் முன் வைக்கப்படுகின்றன.

## தென்னிலங்கையில் பணிபுரிந்த திராவிட அதிகாரிகள்

இக்கோயிலை மகேந்திரன் எனும் திராவிட அதிகாரி கட்டினான் எனக் கூறப்படுகிறது.பராக்கிரமபாகு காலத்தில் மகேந்திரன் என்பவன் மட்டுமல்லாது வேறுசில “திராவிட அதிகாரி” பதவி வகித்த தமிழ்த் தளபதிகளும் இருந்துள்ளனர். பராக்கிரமபாகுவின் *8*ஆவது ஆட்சி ஆண்டில் ரக்கா கங்குகநாதன் எனும் திராவிட அதிகாரியும் இருந்துள்ளான். ரோகன நாட்டைக் கைப்பற்றும் பல போர்களில் ஈடுபட்டு வெற்றி கண்டு பராக்கிரமபாகுவின் மிக நெருக்கமான தளபதிகளில் ஒருவனாக ரக்கா விளங்கினான். இவனது காலத்தில் கூட ரோகன இராச்சியத்தின் எல்லையாக விளங்கிய பெந்தொட்டயில் காளி கோயில் கட்டப்பட்டிருக்கலாம் என நம்ப இடமுண்டு. பராக்கிரமபாகுவின் *16* ஆவது ஆட்சியாண்டில் ஆதித்யன் எனும் திராவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி புகழ்பெற்று விளங்கினான். பர்மா நாட்டை வென்று பராக்கிரமபாகுவிற்கு அழியாப் புகழைத் தேடித் தந்தவன் ஆதித்யன் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகா பராக்கிரமபாகு காலத்தில் கட்டப்பட்ட காளி கோயில் எனும் கூற்று

மகா பராக்கிரமபாகு தனது திராவிட அதிகாரியை பெந்தோட்டைக்கு அனுப்பி அங்கிருந்த விஹாரைக்கு கிராமங்களை வழங்கியதோடு பூஜைகள் செய்யவும் ஏற்பாடு செய்ததாகவும், மன்னன் தமிழ் மக்கள் நிறைந்து காணப்பட்ட பெந்தோட்டையில் தன் தமிழ் அதிகாரி மூலம் காளி கோயிலை கட்டியிருப்பான் எனவும் கூறப் படுகிறது. மகா பராக்கிரமபாகு மன்னனிடம் பணியாற்றிய தமிழ் தளபதிகளில் ரக்கா கங்குகநாதன், ஆதித்யன், மகேந்திரன் ஆகியோரில் ஒருவரால் பெந்தோட்டையில் காளி கோயில் கட்டப்பட்டிருக்கலாம் என நம்பலாம்.

பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் அவனால் திருப் பணிகள் செய்யப்பட 116 கோயில்களில் 24 கோயில்கள் அவனால் புதிதாகக் கட்டப்பட்டவையாகும். இக் கோயி ல்கள் எவை எனத் தெரியவில்லை. அவை பற்றிய குறிப்பு களும் இல்லை. எனவே, இவற்றில் பெந்தொட்ட காளி கோயிலும் அடங்கியிருக்கலாம் என நம்பக் கூடியதாக உள்ளது.

## இந்து சமயத்தைப் பேணி வந்த மகா பராக்கிரமபாகு

மாகோனின் காலத்தின் பின்பு தம்பதெனியாவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த 2 ஆம் பராக் கிரமபாகு மன்னன் காலத்திலேயே பெந்தொட்ட காளி கோயில் கட்டப்பட்டதாக பொதுவாகக் கூறப்பட்டாலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு முன்பாகவே முதலாம் பராக்கிரமபாகுவின் தமிழ்த் தளபதிகளால் இக்கோயில், கட்டப்பட்டிருக்க வேண்டும் எனவும் கூறப்படுகிறது. இலங்கையை ஆட்சி செய்து வந்த சிங்கள மன்னர்களில் பலர் இந்து சமயத்தை பேணி வந்து ள்ளனர். இவர்களில் மிகமுக்கியமானவன் மகா பராக்கிரம பாகு எனும் முதலாம் பராக்கிரமபாகுவாகும். இவனது பணிப்பின் பேரில் கட்டப்பட்டதாகக் கருதப்படும் பெந் தொட்ட காளி கோயில் சிங்கள இலக்கிய நூல்களில் "சுப்பிரசித்த காளி கோவில" எனக் குறிப்பிடப்பட்டு ள்ளது.

**காளி கோயில் கலிங்க மாகோனால் கட்டப்பட்டதா?**

சில ஆய்வாளர்கள் பெந்தோட்டை காளி கோயில் இப் பகுதியைப் பரிபாலித்து வந்த கலிங்க மாகோனின் தளபதியான சந்திரன் என்பவனால் கட்டப்பட்டிருக்க வேண்டும் அல்லது புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் கூறுகின்றனர். கலிங்க மாகோனின் காலம் பொ.ஆ.1215-1255 ஆகும். சந்திரன் பெந்தோ ட்டையின் தெற்கில் இருந்த பெத்தேகம பகுதியில் உள்ள மலையில் கோட்டை கட்டி ஆட்சி செய்து வந்தான் என் பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெந்தோட்டை காளி கோயிலை முற்றாக இடித்து அழித்த போர்த்துக்கேயர்

பெந்தோட்டை காளி கோயில் பொலநறுவையை தலைநகராகக் கொண்டு பொ.ஆ. 1153 முதல் 1186 வரை ஆட்சி செய்த முதலாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் அல்லது பொலநறுவையை கைப்பற்றி பொ.ஆ. 1215-1255 காலப்பகுதியில் ஆட்சி செய்த கலிங்க மாகோன் காலத்தில் அல்லது தம்பதெனியாவை தலை நகராகக் கொண்டு பொ.ஆ. 1236 முதல் 1270 வரை ஆட்சி செய்த 2ஆம் பராக்கிரமபாகுவின் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் எனும் மூன்று கருத்துக்கள் உள்ளன. இருப்பினும் இக் கோயில் சுமார் 750 வருடங்களுக்குக் குறையாத பாரம்பரியத்தைக் கொண்ட ஓர் பண்டைய இந்துக் கோயில் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட முதலாவது இந்துக் கோயில்

இத்தனை பழமைவாய்ந்த வரலாற்றைக் கொண்ட இக் காளிகோயில் அரசப் பிரதானிகளால் நன்கு பராமரிக்கப்பட்டு, "சுப்பிரசித்த காளி கோவில்" என பௌத்த மக்களாலும் அழைக்கப்பட்டது. பின்பு சுமார் 400 ஆண்டுகளின் பின், 1505 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயரால், 1517ஆம் ஆண்டு காளி கோயில் உட்பட இதன் அருகில் இருந்த வனவாசி விகாரையும் இடித்து அழிக்கப்பட்டது. காளி கோயில் அழிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால கட்டத்தில் பெந்தோட்டை மலைப்பகுதியில் இருந்த உடகொட்டுவ போதிமழு விகாரையும் அழிக்கப் பட்ட தாகக் கூறப்படுகின்றது.

போர்த்துக்கேயர் இலங்கையில் கால் வைத்து 12 வருடங்களில் பெந்தோட்டை காளி கோயிலை அழித்து ள்ளனர். இதன் பின்பு இவர்களால் அழிக்கப்பட்ட கோயிலே இரத்மலானை சிவன் கோயிலாகும்.இக்கோயில் **1519**ஆம் ஆண்டு அழிக்கப்பட்டது.இதன்படி போர்த்துக் கேயரால் முதலாவதாக அழிக்கப்பட்ட இந்துக்கோயில் பெந்தோட்டை காளிகோயிலாகும். இரண்டாவதாக இரத் மலானை சிவன் கோயில் அழிக்கப்பட்டுள்ளது. இக் கோயில் தற்போது "கொணாபெந்தி கத்தரகம தேவாலய" என அழைக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெந்தோட்டை காளி கோயிலின் தொல்பொருள் சின்னங்கள்

## காளி கோயிலின் சின்னங்கள் மட்டும் உள்ள பெந்தொட்ட பௌத்த ஆலயங்கள்

பெந்தொட்டயில் சத்தாதீசன் காலத்தில் 5 பௌத்த விஹாரைகள் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. கலப் பாத்த விஹாரை, பெந்தொட்ட விஹாரை, வனவாசி விஹாரை, போதிமலு விஹாரை, பெம்வெஹர விஹாரை ஆகியவையே அந்த 5 பௌத்த ஆலயங்களாகும். இவை போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப் பட்டதாகவும் கூறப் படுகிறது.

இருப்பினும் இந்த 5 விஹாரைகளிலும் தற்போது உள்ள கட்டிடங்கள் பிற்காலத்தில், அதாவது ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டவையாகத் தெரிகின்றது. போர்த் துக்கேயர் காலத்திற்கு முன்பிருந்த எந்த ஒரு விஹாரையின் தொல்பொருட் சின்னங்களும் இங்கு காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அதே சமயம் இங்கு காணப் படும் பழைமை வாய்ந்த தொல்பொருட் சின்னங்கள் அனைத்தும் காளி கோயிலின் சின்னங்களாகவே காணப் படுகின்றன. இருப்பினும் கலப்பாத்த விஹாரையில் உள்ள 3 சந்திரவட்டக்கற்கள் பௌத்த விஹாரைகளுக்குரிய பழ மையான சின்னங்கள் எனக் கூறப்படுகிறது. பௌத்த விகாரைகளில் மட்டுமே காணப்படும் சந்திர வட்டக் கற்கள், பௌத்த மன்னர்கள் கட்டிய அல்லது புனரமைத்த சில இந்துக் கோயில்களிலும் காணப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளி கோயிலின் தலவிருட்சமும், தொல்பொருள் சின்னங்களும் நிறைந்த இடம்

பெந்தொட்ட யாத்ராமுல்லையில் "வனவாசி ரஜ மஹா விஹாரை" எனும் பௌத்த ஆலயம் அமைந்துள்ளது. இங்கிருந்து மேற்கில் சுமார் 500 மீற்றர் தூரத்தில், பெந்தொட்ட கங்கைக் கரையில் காளிகோயில் அமைந்திருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. பெந்தொட்ட பகுதியின் தேசப்படத்தில் இப்பகுதி தொல்பொருட் சின்னங்கள் உள்ள இடம் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இங்கு தற்போது பல வீடுகள் கட்டப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. காளிகோயில் அமைந்திருந்ததாகக் கூறப்படும் இடத்தில் கூட வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இன்று இங்கு காணப்படும் பெரிய விருட்சமே காளி கோயிலின் தலவிருட்சம் என இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். பல நூற்றாண்டுகளாக இந்த இடத்தில் ஓங்கி வளர்ந்து காணப்படும் கூழாமரமே காளி கோயிலின் தலவிருட்சமாக இன்றும் காட்சி கொடுக்கிறது. இது சிங்கள மொழியில் "கொன் கஹ" என அழைக்கப்படுகின்றது.

## காளி கோயிலின் தீர்த்தக் கிணறும், இடிபாடுகளும்

பெந்தொட்ட நதிக்கரையின் புராதன படகுத் துறையிலிருந்து சில யார் தூரத்தில் காளிகோயிலின் இடிபாடுகள் காணப்பட்டன. காளி கோயிலின் மிகப்பழைமை வாய்ந்த கபொக் எனும் சரளைக் கல்லினால் ஆன உறுதியான அத்திவாரம் இங்கு காணப்பட்டது. ஆலயத்தின் தீர்த்தக் கிணறும் இவ்விடிபாடுகளுக்கிடையில் காணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. இவை மீது பற்றைகள் வளர்ந்தும், சில மரக் கன்றுகள் நடப்பட்டும் இருந்தன. காளி கோயிலின் கட்டிட இடிபாடுகளில் காணப்பட்ட பல அருங்கலை பொக்கிஷங்களும், தொல்பொருட் சின்னங்களும் இப்பகுதியில் இருக்கும் பௌத்த ஆலயங்களுக்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளன.

## அருகிலுள்ள பௌத்த ஆலயங்களில் காளி கோயிலின் தொல்பொருட் சின்னங்கள்

பெந்தொட்டைப் பகுதியில் மேற்குறிப்பிட்டுள்ள 5 பௌத்த விஹாரைகளிலும் காளி கோயிலின் தொல் பொருட்சின்னங்கள் இன்றும் காணப்படுகின்றன. காளி கோயிலின் அருகில் சுமார் 500 மீற்றர் தூரத்தில் இருக்கும் வனவாசி விஹாரைக்கு கோயிலின் தீர்த்தக் கிணற்றில் இருந்த கொரல் கற்பாளங்கள் எடுத்துச் செல்லப்பட்டு விஹாரையை புதுப்பிக்கப் பயன்படுத்தப்பட்டதாகவும், காளிகோயிலில் இருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் அமைந் துள்ள போதிமலு விஹாரையின் பிரதான வாசலை அமை ப்பதற்கு கோயிலின் கருங்கற்பீடமொன்று கொண்டு செல் லப் பட்டதாகவும், இன்றும் போதிமலு விஹாரையின் வாசலில் இக்கற்பீடம் காணப்படுவதாகவும் ஆராய்ச்சி யாளர் ஆர்த்தர் ஜெயவர்த்தன தனது ஆய்வுக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## வனவாசி விஹாரையின் பொறுப்பில் காளி கோயில் இடிபாடுகள்

காளிகோயில் அமைந்திருந்த இடத்தில் கிராமவாசிகள் அவ்வப்போது மண்ணை அகழ்ந்தெடுத்ததுடன் தமக்குக் கிடைத்த பல சின்னங்களை எடுத்துச் செல்வதனால் அரு கிலுள்ள வனவாசி விஹாரையின் பொறுப்பில் இவ்விடத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப் பெற்று இங்கிருந்த பல ஆலயச் சின்னங்களை எடுத்துப் பாதுகாப்பாக வைத்துள்ளனர். இதன் மூலம் கிராமவாசிகள் கைகளில் அகப்படாமல் காளிகோயிலின் பல வரலாற்றுப் பொக்கிஷங்கள் பாதுகாக்கப் பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.



**வனவாசி விஹாரை**

## கிராமவாசி கண்டெடுத்த காளிகோயிலின் விளக்கு

இப்பகுதியிலிருந்து மண்ணை அகழ்ந்தெடுத்த கிராம வாசி ஒருவர் காளி கோயிலின் விளக்கு ஒன்றைக் கண்டெ டுத்துள்ளார். இக்கிராமவாசி காலமானதன் பின் இவரது மகள் தந்தையின் பொருட்களை பாதுகாத்து வைத்திருப்ப தாகவும், காளி கோயில் இடிபாடுகளுக்கிடையில் கண் டெடுக்கப்பட்ட விளக்கு இப்பெண்ணிடம் உள்ளதாகவும் கிராம வாசிகள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளி கோயிலின் அருங்கலைப் பொக்கிஷம்

பெந்தொட்ட காளி கோயில் இடிபாடுகள் காணப் பட்ட இடத்திலிருந்து காளி கோயிலின் அருங்கலைப் பொக்கிஷம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதுதான் காளி கோயிலின் வாசல் ஒன்றின் கல் கதவுநிலை. அரிய பல சிற்ப வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டுள்ள இக்கதவு நிலை பெந்தொட்ட கலப்பாத்த விஹாரையின் வாசலில் இன்றும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.



**கலப்பாத்த விகாரை**

## பெந்தோட்டை கலப்பாத்த விகாரை

பெந்தொட்டயிலிருந்து அல்பிட்டிக்கு செல்லும் வீதி யில் சுமார் 3 கி.மீ தூரத்தில் உள்ள கோம்மல என்னு மிடத்தில் கலப்பாத்த விஹாரை அமைந்துள்ளது. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஹாரைக்குச் செல்லும் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் கலைப் பொக்கிஷமாக, சிற்பக் கருவூலமாக காளி கோயிலின் கதவுநிலை காணப்படுகின்றது. பெந்தொட்ட கலப்பாத்த விஹாரை என்ற பெயரைக் கேட்டவுடன் அங்கு சென்று வந்தவர்களுக்கு உடனே ஞாபகம் வருவது இக்கல் கதவுநிலை தான். கலப்பாத்த விஹாரையில் காளி கோயிலின் பல தொல்பொருட் சின்னங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

## கலப்பாத்த விஹாரையின் அமைப்பும், காளி கோயிலின் தொல்பொருட் சின்னங்களும்.

கலப்பாத்த விஹாரையின் பிரதான வாசலின் வலது பக்கம் ஓர் சிறிய தாமரைக் குளமும், அதனருகில் ஓர் புராதன கற்கிணறும் காணப்படுகின்றன. பிரதான வாசலில் வெறுமையான சந்திரவட்டக் கல்லும், 4 கற்படிகளும் அதனை அடுத்து நிறுத்தி வைக்கப்பட்ட புராதன கற் தூண்கள் நான்கும் காணப்படுகின்றன. இவற்றை அடுத்து சிறிய புற்தரை உள்ளது. புற்தரையை அடுத்து 16 கற் படிகள் உள்ளன. அதனை அடுத்து மேலும் 4 கற்தூண்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இவ்விடத்தின் வலது பக்கத்தில் இயற்கையாக வளர்ந்துள்ள கற்பாறை மீது சிங்கள மொழியில் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டு ள்ளது. இது கம்பி வேலியினால் சுற்றி வளைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. இவற்றை அடுத்து இன்னுமோர் சமமான புற்தரை உள்ளது. புற்தரையை அடுத்து இயற்கை யான பாறையில் செதுக்கப்பட்ட 10 கற்படிகள் காணப் படுகின்றன. இக்கற்படிகளுக்கு வலது பக்கத்தில் தான் காளி கோயிலின் கலைப் பொக்கிஷமான கல் கதவுநிலை உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கலப்பாத்த விகாரையில் உள்ள காளி கோயிலின் கற்தூண்கள்**

இவ்விடத்தில் இயற்கையான பாறையிலே 5 படிகள் செதுக்கப்பட்டுள்ளன. இப்படிகளை அடுத்து செவ்வக வடிவில் பாறையில் ஓர் பள்ளம் வெட்டப்பட்டு அதில் நீர் நிரப்பி அல்லிக்கொடிகள் படர விடப்பட்டுள்ளன. இதனை அடுத்து, காளி கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்ட அழகிய, அரிய சிற்பங்கள் செதுக்கப்பட்ட கல்கதவு நிலையின் நான்கு துண்டுகளும் பொருத்தப்பட்டு கருங்கல், சீமெந்து பூச்சு போன்றவற்றால் சுற்றிவர கட்டப்பட்டு மேலே ஓர் சிறிய கூரையும் வேயப்பட்டு பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**காளி கோயிலின் கல் கதவுநிலையின் அழகிய தோற்றம்**

10 கற்படிகளின் இடது பக்கத்தில் உள்ள மேடை மீது தூபி கட்டப்பட்டுள்ளது. தூபியைச் சுற்றி 4 கற் தூண்களும், கற்படிகளை அடுத்து மேலும் 4 கற்தூண் களும், இத்தூண்கள் மீது ஒர் கண்டாமணியும், மணித் தூண்களின் இடது பக்கத்தில் சுமார் 6 அடி நீளமும், 4 அடி அகலமும் கொண்ட பாரிய கற்பீடம் ஒன்றும், பின்பக்கம் புராதன சிலைமனையும், இடதுபக்கம் புதி தாக அமைக்கப்பட்ட சிலைமனையும், வலது பக்கம் பிக்குகள் வாசம் செய்யும் மடப்பள்ளியும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கல் கதவுநிலைக்கு அருகில் இடது பக்கத்தில் உள்ள காளி கோயிலின் கற்தூண்கள்**

மொத்தமாக *18* கருங்கற் தூண்களும், ஒரு அழகிய கற்கதவு நிலையும், கண்டா மணியும், இரு கைப்பிடி வரிசைகளும், பாரிய கற்பீடமும் காளி கோயிலில் இருந்து கொண்டு வரப்பட்டு இவ்விஹாரையில் பாதுகாக்கப் பட்டுள்ள தொல்பொருட் சின்னங்களாகும். மேலும் சிவ லிங்கத்தின் மீது பலிபீடம் இருப்பது போன்ற லிங்கக்கல் ஒன்றும் இங்கு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**புராதன லிங்கக்கல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**காளி கோயில் கற்பீடம்**



**காண்டா மணியும், கைப்பிடி வரிசைகளும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கோயில் அதிட்டானத்தின் செதுக்கப்பட்ட, உடைந்த கற்துண்டு**

## காளிகோயில் கல்கதவு நிலையின் அமைப்பு

கலபாத்த விஹாரையில் காணப்படும் தொல்பொருள் சின்னங்களில் கல்கதவு நிலையின் அழகே தனி. கதவுநிலை உள்பக்கத்தில் சுமார் 3 அடி அகலமும், 6 ½ அடி உயர மும் கொண்டது. கதவு நிலையின் மூன்று பக்கங்களும் தலைகீழாக "ப" என்ற எழுத்து வடிவில் ஒரே கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ளது. போர்த்துக்கேயரால் இது நான்கு துண்டுகளாக உடைக்கப்பட்டுள்ளது. இடது பக்கம் இர ண்டு துண்டுகளாகவும், மேல் பக்கம் தனியாகவும், வலது பக்கம் தனியாகவும் உடைக்கப் பட்டுள்ளது. கீழே உள்ள படிக்கல் வேறொரு தனிக்கல்லில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தனை துண்டுகளையும் அழகாகப் பொருத்தி நிறுத்தி வைத்துள்ளார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெந்தோட்டை காளி கோயில் கல் கதவு நிலையின் முழுமையான தோற்றம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ள பகுதி சுமார் 18 அங்குல அகலமுடையது. கதவு நிலையின் பருமன் சுமார் 22 அங்குலமாகும். சில இடங்களில் பருமன் ஓரிரு அங்குலங்கள் கூடியும், குறைந்தும் காணப்படுகின்றது. கதவு நிலையில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் கண்ணைக் கவரும் கலையம்சத்துடன் பொறிக்கப் பட்டுள்ளன.

## கதவு நிலை சிற்பங்களின் அழகும், வடிவமைப்பும்

கதவு நிலையின் இடதுபக்கம், கீழ்ப்பாகத்தில் ஓர் பெண் நடனமாடிக் கொண்டிருக்கிறாள். பெண்ணின் தலையிலிருந்து ஓர் கொடி மேல் நோக்கிப் படர்ந்து செல்வது போலவும், இதன் மூலம் உருவான ஆறு வட்டங்கள் ஒன்றின் மேல் ஒன்றாகவும் செதுக்கப்பட்டுள்ளன.




**கதவு நிலையின் மேல் பகுதி (அண்மித்த தோற்றம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் கொடி இடது பக்கமாகத் திரும்பி மேலும் ஓர் வட்டத்தை உருவாக்கியபடி, மேலும் சிறிது தூரம் படர்ந்து சென்று கதவு நிலையின் மேல் பக்கத்தின் நடுப் பகுதியில் முடிவடைகிறது. அதுபோல இடது பக்கம் நடனமாடும் ஓர் பெண்ணின் தலையிலிருந்து மேல் நோக் கிப் படர்ந்து செல்லும் இன்னுமொரு கொடி ஆறு வட்ட ங்களை உருவாக்கி பின் வலதுபக்கமாகத் திரும்பி மேலும் ஓர் வட்டத்தை உருவாக்கிய பின் முன்னைய கொடி முடி வடைந்த இடத்தில் முடிவடைகிறது.



**கதவு நிலையின் இரண்டு பக்கங்கள் (அண்மித்த தோற்றம்)**

கதவு நிலையில் மொத்தமாக **14** வட்டங்களும் மேற் பக்கத்தின் நடுப்பகுதியில் முட்டை வடிவமான விட்டமும் காணப்படுகின்றன. ஒவ்வொரு வட்டத்திற்குள்ளும் ஒரு பெண்ணின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இப் பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறுபட்ட அபிநயங்களுடன் நடனமாடுவது போல வும், சில வட்டங்களில் உள்ள பெண்கள் மிருதங்கம் போன்ற இசைக்கருவிகளை வாசிப்பது போலவும் மிக அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளன. சிற்பி தனது உன்னத கைவண்ணத்தை இங்கே காட்டியிருப்பது தெளிவாகத் தெரிகிறது.


## கொனார்க் சூரிய பகவான் கோயில் சிற்பங்களை ஒத்த காளி கோயில் சிற்பங்கள்

இலங்கையில் இத்தனை அழகிய பழைமை வாய்ந்த கல் கதவுநிலை (பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டு) வேறெந்த இடத்திலும் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. வட இந்தியாவில் ஒரிஸ்ஸா மாநிலத்தில் உள்ள கொனார்க் என்னுமிடத்தில் அமைந்துள்ள சூரிய பகவான் கோயிலில் உள்ள சிற்பங்களை ஒத்ததாக காளி கோயில் கதவு நிலை சிற்பங்கள் உள்ளன. கொனார்க் சிற்பங்களும் பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டில் செதுக்கப் பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது. கொனார்க்கில் உள்ள தேர்ச்சக்கர சிற்பங்கள் உலகப் பிரசித்தி பெற்றவையாகும்.

இங்கு அரைத் தூண்களில் படரும் கொடியில் பெண்கள் நடனமாடும் அல்லது மேளம், மிருதங்கம் போன்ற இசைக் கருவிகளை வாசிக்கும் வடிவில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்களைப் போலவே பெந்தொட்ட காளி கோயிலின் கதவு நிலையிலும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மேலும் தேர்ச் சக்கரங்களில் உள்ள வட்டத்தினுள் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களில் சிலவும் அது போலவே காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**காளி கோயில் சிற்பங்களைப் போன்ற கோனார்க் சூரிய பகவான் கோயில் சிற்பங்கள்**

## கோயில் அமைந்திருந்த இடத்தில் இருந்து வெளிப்பட்ட வைப்புத் திரவியம்

சிலகாலத்திற்கு முன்பு காளி கோயில் அமைந்திருந்த இடத்தில் கோயிலின் வைப்புத் திரவியம் அடங்கிய குவளை ஒன்று கிடைத்துள்ளது. கிராமவாசிகள் இவ்விடத்தில் உள்ள சரளைக்கல் மண்ணை அகழ்ந்தெடுத்துக் கொண்டிருந்த போது நிலத்திலிருந்து மண் குவளை ஒன்று வெளிப்பட்டது. இதனுள் சில பழங்கால காசுகள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் முழுமையான அகழ்வாராய்ச்சிகள் மேற்கொண்டால் காளிகோயிலுக்குரிய பல பெறுமதியான செல்வங்களையும், அரிய தொல்பொருட் சின்னங்களையும் கண்டெடுக்க முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என காளி கோயில் பகுதியை ஆய்வு செய்த ஆய்வாளர் ஆர்த்தர் ஐயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

## இதுவரை கிடைக்கப்பெறாத காளி கோயில் விக்கிரகங்கள்

இருப்பினும் கிராமவாசிகள் கைகளுக்கு அகப்பட்ட காளிகோயில் சின்னங்களில் சில இன்று தனியாரின் சொத் தாகவும், சில தொல்பொருட் சின்னங்களை பயத்தின் கார ணமாக தங்கள் வீடுகளில் மறைத்தும், சில சின்னங்கள் கைப்பற்றியவர்களின் வீடுகளில் மண்ணோடு மண்ணாகப் புதையுண்டும் அழிந்து போயுள்ளன.அதேசமயம் இதுவரை இவ்வாலயத்தின் விக்கிரகங்கள் எதுவும் கிடைத்ததாகத் தெரியவில்லை. கோயிலை இடித்தழித்த போர்த்துக்கேய சிப்பாய்கள் சிலைகளை அருகில் இருந்த பெந்தொட்ட கங்கையில் வீசியெறிந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. அவற்றில் தேடுதல் நடத்தி சிலைகளை மீட்க இதுவரை யாரும் எந்த முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை. பெந்தொட்ட கங்கையில் குறிப்பிட்ட இடத்தில் உரிய முறையில் தேடுதல் நடத்தினால் புராதன காளிகோயிலின் விக்கிரகங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது.

## காளி கோயில் கட்ட விசேடமாக நிரப்பப்பட்ட மண்

காளிகோயில் அமைந்திருந்த இடத்தில் சுமார் 20 யார் நீள அகலமுள்ள சதுரவடிவான நிலத்தின் மண், இக் கிராமத்தின் ஏனைய பகுதிகளில் உள்ள மண்ணை விட மிகவும் வித்தியாசமாகக் காணப்படுகிறது. இம்மண் கடின மானதாகவும், கடுமையான நிறத்துடனும் சரளைக் கற்கள் *(Gravel)* கொண்ட மண்ணாகவும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மண்ணை சில அடிகள் ஆழமாகத் தோண்டியதும் கீழே துண்டுகளாக உடைக்கப்பட்ட கபொக் கற்களும் (சரளைக்கல்) அதன் கீழே கற்தூண்களும் காணப்படுகின்றன. ஆனால் கிராமத்தின் ஏனைய எல்லாப் பகுதிகளிலும் ஆற்றுமண் போன்ற இறுக்கமற்ற மண்ணே காணப்படுகிறது. கோயில் கட்டுவதற்கு முன்பு அவ்விடத்தில் சாதாரண மண் அகழ்ந்தெடுக்கப்பட்டு, அதனுள் கற்துண்டுகளும், அதன் மேல் சரளைக் கற்துண்டுகளும், அதன் மீது இறுக்கமான மண்ணும் நிரப்பப்பட்டு அதன்மீது கோயில் கட்டப்பட்டுள்ளது. இப்பொழுதும் கோயில் இருந்த இடத்தின் உள்ள இவ்வுறுதியான மண்ணை கிராமவாசிகள் அகழ்ந்தெடுத்து தங்கள் வீடுகளைக் கட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேச நூல்களில் பெந்தொட்ட காளி கோயில்

பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பெந்தோட்டை காளிகோயில் அன்று சீரும் சிறப்புடனும் விளங்கியது. 14ஆம் நூற்றாண்டில் பிரசித்தி பெற்றிருந்த ஆலயங்கள் பற்றி அக்காலப் பகுதியில் எழுதப்பட்ட சிங்கள இலக்கிய நூலான "பரவிசந்தேச" எனப்படும் பறவை விடு தூது பாடல்கள் அடங்கிய நூலில் பெந்தொட்டை காளி கோயில் பற்றிய பாடல்களும் உள்ளன.


இந்நூல் கோட்டை இராச்சியத்தை ஆட்சி செய்த 6ஆம் பராக்கிரமபாகு மன்னனின் அரசவைப் பண்டிதராக விளங்கிய ஸ்ரீ ராகுல தேரர் எனும் பௌத்த பிக்குவால் பொ.ஆ. 1430-1440ஆம் ஆண்டு காலப்பகுதியில் எழுதப்பட்டதாகும். இந்நூல் மன்னன் பராக்கிரமபாகுவின் நலம் வேண்டி, கோட்டையிலிருந்து தெவிநுவர எனும் தெய்வந்துறையில் இருக்கும் விஷ்ணு பகவானிடம் சென்று வணங்கி வரும் வகையில் புறாவைத் தூது விடுவதாக எழுதப்பட்ட செய்யுள்கள் அடங்கிய நூலாகும்.

இந்நூலில் 71 வது பாடல் பேருவளை பற்றிய பாடலாகும். 72 ஆவது பாடல் பெந்தொட்டை காளி கோயில் பற்றிய பாடலாகும். அடுத்த 73 வது பாடல் வனவாசி விஹாரை பற்றிய பாடலாகும். அதன் பின்பு பெந்தோட்டையைவிட்டு புறா வேறு இடத்திற்கு செல்வதாக பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. இந்நூலில் பெந்தோட்டையில் முதலாவதாகப் புறா காளி கோயிலைத் தரிசித்த பின்பே, இரண்டாவதாக வனவாசி விகாரைக்குச் செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெந்தோட்டையில் வேறு எந்த வணக்கத் தலங்கள் பற்றிய விபரங்கள் நூலில் கூறப்படவில்லை. இதிலிருந்து பெந்தோட்டையில் காளி கோயிலே பெரிய, பிரசித்தி பெற்ற வணக்கத் தலமாகவும், இரண்டாவதாக வனவாசி விஹாரையும் விளங்கியுள்ளன என்பது தெளிவாகத் தெரி கின்றது.



**பரவி சந்தேச நூல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயில் அன்று எவ்வளவு பயபக்தியுடன் இப் பகுதி மக்களால் பூஜிக்கப்பட்டுள்ளது என்பதும் இதன் மூலம் ஊகித்துக்கொள்ளக் கூடியதாக உள்ளது. அத்துடன் இவ்விரு ஆலயங்களைத் தவிர வேறு எந்த வணக்கத் தலங்களும் இக்காலப்பகுதியில் பெந்தோட்டையில் இரு க்க வில்லை என்பதும் உறுதியாகத் தெரிகிறது. இன்று பிர சித்தி பெற்று விளங்கும் கலப்பாத்த விகாரையும் அன்று இருக்கவில்லை எனவும் இதன் மூலம் கூறக் கூடியதாக உள்ளது.

## காளி கோயில் பற்றி பரவி சந்தேச குறிப்பிடும் விடயம்

ஸ்ரீராகுல தேரரால் எழுதப்பட்ட "பரவிசந்தேச" எனும் புறா விடுதூது நூலில் 72 ஆவது பாடல் பெந் தொட்ட காளி கோயில் பற்றிய பாடலாகும். இதில் தங்க ஆபரணங்கள் ஜொலிக்க காண்போர் மனதைக் கொள்ளை கொள்ளும் அழகிய மங்கையர் தேவார துதிகள் பாடி ஆடும் அழகைக் காண வேறு எந்தப் பக்கத்திலும் திரும் பாமல், துஷ்டர்கள் யாரையும் பார்க்காமல், பெந்தொட்ட ஆற்றின் அக்கரையில் உள்ள காளி கோயிலுக்கு சென்று அங்கே தங்கிவிடு எனப் புறாவிடம் கவிஞர் கூறுவது போல் பாடல் புனையப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெந்தோட்டையில் தமிழர் தொடர்பான கல்வெட்டு

## பராக்கிரமபாகு காலத்தில் பெந்தொட்ட பகுதியில் தமிழர்கள்

பராக்கிரமபாகு காலத்தில் பெந்தொட்ட பகுதியில் பெருந்தொகையான தமிழர்கள் வாழ்ந்துள்ளனர். மேலும் இப்பகுதியின் முக்கிய பிரதானிகளாக தமிழர்கள் விளங்கி யுள்ளனர். இங்கு தமிழர்கள் வாழ்ந்தது பற்றி கலபாத்த விஹாரையின் முன்பக்கம் உள்ள பாறையில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டு கூறும் செய்தி மூலம் அறியக் கூடி யதாக உள்ளது. கம்பி வேலி அடைத்து இக்கல்வெட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது.



**தமிழர் தொடர்பான கலபாத்த விஹாரைக் கல்வெட்டு**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திராவிட அதிகாரி மகேந்திரன் பொறித்த கல்வெட்டு

இக்கல்வெட்டு சிங்கள மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. இயற்கையான பாறையில் 12 அடி நீளமும் 5 அடி அகலமும் கொண்ட இக்கல்வெட்டு 28 வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. பராக்கிரமபாகு மன்னனால் திராவிட அதிகாரி எனும் பதவியைப் பெற்றிருந்த தமிழ்த் தளபதிகள் பலர் இருந்தனர். இவர்கள் பராக்கிரமபாகுவின் தமிழ்ப் படையினரின் தலைவர்களாக விளங்கினர்.


இந்த திராவிட அதிகாரிகளில் ஒருவனான கஹம்பல் குழு மிந்தல் மகேந்திரன் (கஹம்பல் குழுகாமத்தின் மகேந்திரன்) என்பவனால் இக்கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. பராக்கிரமபாகுவின் 30 ஆவது ஆட்சி ஆண்டிலே பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டில் கலப்பாத்த விஹாரைக்கு நிவந்தமாக அளிக்கப்பட்ட கிராமங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.



**பெந்தோட்டை கலபாத்த விஹாரைக் கல்வெட்டின் படியெடுக்கப்பட்ட பிரதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வெட்டில் தமிழ்ப் பெயர்களும், செட்டிமார்கள் வாழ்ந்த நம்செட்டி பொல்வத்தையும்

இக்கல்வெட்டில் பல இடங்களில் தமிழ் சம்பந்தமான வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. 2ஆம்,20ஆம்,21ஆம், 22ஆம் வரிகளில் தெமள (தமிழ்) எனும் சொல்லும், 7ஆம் வரியில் நம்செட்டி எனும் வடக்கிலுள்ள தென்னந் தோட்டம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. விஹாரைக்கு அளிக்கப்படும் இடங்களில் வடக்கில் உள்ள நம்செட்டி பொல்வத்தை எனும் இடமே வடக்கு எல்லையாகக் குறிப் பிடப்பட்டுள்ளது. இது செட்டிமார்கள் வாழ்ந்த பகுதியாக இருக்க வேண்டும். இன்றும் பெந்தொட்டயின் வடக்கில் சுமார் 2 கி.மீ தூரத்தில் ஹெட்டிமுல்ல (செட்டிமூலை) எனும் இடம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.இதுவே கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நம்செட்டி பொல் வத்த எனும் இடமாக இருக்க வேண்டும் எனக் கூறப் படுகிறது.

இக்கல்வெட்டில் விஹாரைக்கு பூஜை செய்யும் உப யக்காரர்களின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இப் பெயர்களில் அதிகமானவை தமிழர்களின் பெயர்களாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பொன்வாணி, சாத்தி, கரடி, செல்லி, தெமளபயா, நம்பி, சுப்பன், களுராமன், சுதுராமன், குடாராமன், சிந்தெமளி போன்றவை இப் பெயர்களில் சிலவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெந்தோட்டையில் விநாயகர் மற்றும் விஷ்ணு வழிபாடு

## கலப்பாத்த விஹாரையில் விநாயகர் சிலை

சில காலத்தின் முன்பு பெந்தொட்ட கலப்பாத்த விஹாரைக்கு இந்துக்களும் சென்று வழிபட்டு வந்ததாகத் தெரிகிறது. அப்போது இங்கு எந்த ஒரு இந்துக் கோயிலும் இல்லாவிட்டாலும் ஓர் விநாயகர் சிலை மட்டும் இருந்ததாகவும், இவ்விநாயகரைத் தரிசிக்க இந்துக்கள் கலப்பாத்த விஹாரைக்கு செல்வதாகவும் குறிப்புகள் கூறுகின்றன. முன்பு இங்கிருந்த விநாயகர் தற்போது இங்கே காணப்படவில்லை. இங்குள்ள பழைய சிலைமனையின் வலது பக்கம் உள்ள ஓர் சிலைமனையின் பகுதியும், அதன் வாசலும் மூடப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதன் வாயிலில் பழைய தளபாடங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதிதான் சில காலத்தின் முன்பு விநாயகர் சந்நிதியாக இருந்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. இவ்விநாயகர் சிலை காளி கோயிலில் இருந்த ஓர் பரிவார மூர்த்தியா அல்லது வேறு ஓர் விநாயகர் கோயிலின் மூலமூர்த்தியா என்பது தெரியவில்லை.

## கலிங்க மாகோன் காலத்தில் அமைக்கப்பட்ட விநாயகர் கோயில்

பொ.ஆ. *1215-1255* வரை இலங்கையின் பெரும் பகுதியை ஆட்சி செய்த கலிங்க மாகோன் காலத்தில் அவனது ஆட்சிப் பகுதிக்கு உட்பட்ட பிரதேசமாக பெந்தொட்ட பகுதியும் விளங்கியது. இக்காலப் பகுதியில் கலப்பாத்த விஹாரைக்கு அருகில் ஓர் இந்துக்கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டிருந்ததாகத் தெரியவருகிறது. இக்கோயி லின் விநாயகர் விக்கிரகமே பிற்காலத்தில் கலப்பாத்த விஹாரையில் வைத்து வணங்கப்பட்டது எனவும் கூறப் படுகிறது. எனவே கலிங்க மாகோன் காலத்தில் இங்கு அமைக்கப்பட்ட கோயில் கணேசர் கோயிலாக இருக்க லாம் எனவும் நம்பக் கூடியதாக உள்ளது.

பெந்தொட்ட கலப்பாத்த விஹாரைக்குப் போகும் வழியில் கலப்பாத்த விஹாரையிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் கணே விஹாரை எனும் பௌத்த ஆலயம் அமைந்துள்ளது. "கணே" எனக் கூறப்படுவது கணேசர் என்பதையே குறிப்பதாகும். எனவே தற்போது கணே விஹாரை அமைந்திருக்கும் இடத்தில் மாகோன் காலத்தில் கணேசர் கோயில் அமைக்கப் பட்டிருக்க வேண்டும். மாகோனின் தளபதியான சந்திரன் என்பவனால் இக் கோயில் அமைக்கப்பட்டதாகக் குறிப்புகள் கூறுகின்றன.

## மாகோனின் தளபதி சந்திரன் பெத்தேகமவில் அமைத்த மலைக்கோட்டை

மாகோன் காலத்தில் மிகவும் கண்டிப்பான தளபதி யாக விளங்கிய சந்திரனின் கட்டுப்பாட்டில் இப்பகுதி விளங்கியுள்ளது. பெந்தொட்டயின் தெற்கில் சுமார் 40 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள பெத்தேகம என்னுமிடத்தில் மாகோன் காலத்தில் அமைக்கப்பட்ட மலைக் கோட்டை ஒன்று இருந்தது. இம்மலைக் கோட்டையிலிருந்தே தளபதி சந்திரன் இப்பகுதியை பரிபாலித்து வந்ததாகத் தெரிய வருகிறது. இவ்விடம் காலியின் வடக்கில் 18 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இதன் மூலம் கலிங்க மாகோ னின் ஆட்சி தெற்கில் காலி வரை பரந்திருந்தது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டிப்பான தமிழ்த்தளபதி வாழ்ந்த ஹெடி தெமளகந்த

மாகோனின் ஆட்சி தொய்வுற்றிருந்த காலகட்டத்தில் பாண்டிய நாட்டின் படைகளுடன் வந்த 2ஆம் பராக்கிரம பாகுவின் படைகள் இம்மலைக் கோட்டையை முற்றுகை யிட்ட போது தளபதி சந்திரன் கோட்டையிலிருந்து தப் பிச் சென்று, அருகில் இருந்த குளத்தில் பாய்ந்து தற் கொலை செய்து கொண்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.



**இன்று தூர்ந்து போன நிலையில் சந்திரவெல குளம்**


மாகோனின் சந்திரன் எனும் கண்டிப்பான தமிழ்த் தளபதி வசித்த மலைக்கோட்டை என்ற காரணத்தினால் இம்மலை “ஹெடி தெமளகந்த” எனப் பெயர் பெற்று விளங்குகின்றது. ஹெடி தெமள என்ற சிங்கள வார்த்தை யின் பொருள் “கண்டிப்பான தமிழன்” என்பதாகும். ஹெடி தெமள கந்தயின் அருகில் சந்திரன் குதித்துத் தற்கொலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொண்ட குளம் "சந்திரவெல" எனப் பெயர் பெற்றுள்ளது.

சந்திரன் மலையில் தனது வழிபாட்டிற்காக அமைத்த விநாயகர் கோயில் இம்மலையில் இன்றும் காணப்படுகின்றது. "கணேகம ஹெடிதெமள கந்த புராண விஹாரய" என இது அழைக்கப்பட்டது. கணேகம என்பது கணேச கிராமம் எனப் பொருள்படும். தற்போது இவ்விடம் "பெத்தேகம துட்டுகெமுனு விஹாரய" என பெயர் மற்றம் செய்யப்பட்டுள்ளது.



**ஹெடி தெமள கந்த மலையில் உள்ள விநாயகர் கோயிலுக்கு செல்லும் வாசல் (இப்போது துட்டுகெமுனு விகாரை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஹெடி தெமள கந்த மலை துட்டுகெமுனு விஹாரைக்குச் செல்லும் சந்தியில் உள்ள பெயர்ப்பலகை**

## பெத்தேகம லேல்வல பகுதியில் கலிங்க மாகோனின் தமிழ்த் தளபதிகள் கட்டிய கோயில்

பெத்தேகம பகுதியில் உள்ள லேல்வல என்னுமிடத்திலும் கலிங்க மாகோனின் தமிழ்த் தளபதிகள் கட்டிய இன்னுமோர் இந்துக் கோயில் அமைந்திருந்தது. இக் கோயில் பெந்தோட்டை போதிமழு கலபாத்த விஹாரையின் பரம்பரையினருக்கு சொந்தமானது எனக் கூறப்படுகின்றது.

ஏனெனில் கலிங்க மாகோனின் தமிழ்த் தளபதிகள் பெந்தோட்டையில் அமைத்த கோயிலை பின்பு போதி மழு கலபாத்த விகாரையின் பரம்பரையினர் பராமரித்து வந்துள்ளனர். இது போல தமிழ்த் தளபதிகள் லேல்வல பகுதியில் கட்டிய கோயிலும் இவர்களின் பராமரிப்பின் கீழ் வந்திருக்கலாம். இக்கோயில் அமைந்திருந்த இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது "லேல்வல கலபத்த புராண மஹா விஹாரய" என அழைக்கப்படுகின்றது. இக்கோயில் தற்போது இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தின் பராமரிப்பில் உள்ளது.

## கலப்பாத்த விகாரையில் விஷ்ணு வழிபாடு

பெந்தோட்டை கலபாத்த விகாரையில் விஷ்ணு பகவானுக்கு ஓர் பரிவாரக்கோயில் காணப்படுகிறது. இங்கு விஷ்ணு பகவானின் சிலை ஒன்று பௌத்த மக்களால் வழிபடப் படுகின்றது. இவ்விஷ்ணு சிலை சுமார் 300 வருடங்கள் பழமை வாய்ந்தது எனக் கூறப்படுகிறது. பொதுவாகவே பௌத்த விகாரைகளில் விஷ்ணு பகவான், முருகன் ஆகியோருக்கு பரிவாரக் கோயில்கள் அமைத்து, பௌத்த மக்கள் அவர்களை பயபக்தியுடன் வழிபடுவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெந்தோட்டை காளி கோயிலை மீண்டும் கட்டியெழுப்ப மேற்கொள்ளப்பட்ட முயற்சி

## ஆய்வாளர் ஆர்த்தர் ஜெயவர்த்தனவின் காளி கோயில் பற்றி ஆய்வு அறிக்கை

பெந்தொட்ட காளி கோயில் பற்றி ஆர்த்தர் ஜெய வர்தன எனும் ஆய்வாளர், இலங்கை ரோயல் ஆசியா கழகத்தின் 1884 ஆம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். பெந்தொட்ட யாத்ராமுல்லைப் பகுதியில் மிகப் பழைமை வாய்ந்த கட்டடங்களில் இடிபாடுகளைக் காணக் கூடியதாகவும், இவை இங்கிருந்த மிகப் பிரசித்தி பெற்ற காளி கோயிலுக்குரியவை என இப்பகுதி மக்கள் கூறியதாகவும், மிகப் புராதன காலத்தில் இவ்விடத்தில் குடி கொண்டிருந்த காளி எனும் யக்ஷிக்காக இக்கோயில் அமைக்கப்பட்டதாக தங்கள் மூதாதையினர் கூறியதாக அம்மக்கள் தெரிவித்ததாகவும் ஜெயவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

இப்பகுதி மக்களின் காவல் தெய்வமாக காளிஅம்மன் விளங்கியுள்ளார். தங்கள் வயல் நிலங்களுக்குப் பாதுகாப்பாக காளி அம்மன் விளங்கியதால் அறுவடைக்குப் பின்பு அம்மனுக்கு படையலிட்டு பூஜைகள் செய்வதாகவும், இன்றும் இவ்வழக்கத்தை இப்பகுதி மக்கள் கடைப்பிடித்து வருவதாகவும் கூறப்படுகிறது. இரண்டு ஊமைப் பெண்கள் கோயில் இருந்த இவ்விடத்தை கூட்டித் துப்பரவு செய்து தீபம் ஏற்றி வழிபட்டு வந்ததாக தங்கள் பாட்டன், பூட்டன் ஆகியோர் கூறியதாக இப்பகுதி மக்கள் கூறுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன்றனர். வயல் வேலைகளுக்குச் செல்லும் விவசாயிகள் இவ்விடத்தில் காளி அம்மனை நினைத்து பூ மற்றும் பழங்கள் வைத்து வணங்கி விட்டுச் செல்கின்றனர்.

## காளி கோயிலை மீண்டும் கட்டியெழுப்ப ஆர்த்தர் ஜெயவர்தன மேற்கொண்ட முயற்சி

பெந்தொட்ட, யாத்ராமுல்ல பகுதிகளில் உள்ள கிராம சங்கங்களும், கிராமத் தலைவர்களும் ஒன்றிணைந்து காளி கோயில் இருந்த இடத்தில் முறையான அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்ள ஓர் சிறிய தொகையை சேகரித்து ஆய்வுகளை மேற்கொள்ளும்படி ஆர்த்தர் ஜெயவர்தன ஆலோசனை கூறியுள்ளார். அதுமட்டுமல்லாது கிராம வாசிகள் எல்லோரும் ஒரு சிறிய தொகைப் பணத்தை மாதாந்தம் கொடுத்துதவி இப்புராதன காளி கோயிலை இவ்விடத்தில் மீண்டும் கட்டியெழுப்ப உதவும் படியும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காளி கோயிலைக் கட்டி முடித்தவுடன் இங்கிருந்த புனிதச் சின்னங்களை ஊர்வலமாக எடுத்துச் சென்று தெவிநுவர விஷ்ணு கோயிலில் நடப்பதைப் போன்று விழாவாகக் கொண்டாட வேண்டும் எனவும், இது வெற்றியளிக்கும் பட்சத்தில் வருடாவருடம் பெரிய விழா கொண்டாடப்பட வேண்டும் எனவும் இவர் தெரிவித்துள்ளார். தெவிநுவர விஷ்ணு கோயிலில் இப்படிப்பட்ட ஊர்வலம், விழா போன்றவற்றின் மூலமே நிதி திரட்டப்பட்டு அவ்வாலயத்தை நன்கு பராமரித்து வருவதாகவும், அதுபோல பெந்தோட்டையிலும் காளியை ஊர்வலமாகக் கொண்டு சென்று, விழா எடுப்பதன் மூலம் பெருந்தொகையான நிதியும் சேகரிக்கப் படுவதோடு, உள்ளூர் வாசிகளின் உற்பத்திப் பொருட்களையும் விற்கக்கூடியதாகவும் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும், இதனால் கிராமவாசிகளும் பயன் பெறுவர் என வும் ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

பெந்தொட்டையில் அமைந்திருக்கும் 5 புராதன பௌத்த ஆலயங்களான கலப்பாத்த, வனவாசி, பெந் தொட்ட, போதிமளுவ, பெம்வெஹெர ஆகிய பௌத்த விகாரைகளுக்கு நிகராக புராதன காலத்தில் காளிகோயி லும் விளங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள் ளார். பொ.ஆ.16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்ட பெந்தொட்ட காளிகோயில் சுமார் 300 ஆண்டுகள் இடிபாடுகளாய்க் கிடந்தது. 1884ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆட்சியின் போது ஆர்த்தர் ஜெய வர்தன அவர்களால் மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இம்முயற்சிகள் கைகூட வில்லை என்பதே வரலாற்று உண்மையாகும்.

பெந்தோட்டையில் காளி கோயிலை மீண்டும் கட்டி யெழுப்ப எடுக்கப்பட்ட முயற்சி ஏன் கைகூடவில்லை என்பது தெரியவில்லை. பெந்தோட்டை பகுதி சிங்கள பௌத்த மக்கள் வாழும் பிரதேசமாகும். சிங்கள பௌத்த மக்கள் காளி அம்மன் மீது மிகவும் பயபக்தி கொண் டவர்கள். கொழும்பு முகத்துவாரம் (மோதர) காளி கோயி லில் தமிழ் மக்களை விட சிங்கள மக்களே தினமும் அதி களவில் வந்து வழிபடுவதைக் காணலாம். எனவே பெந் தோட்டை காளி கோயிலை மீண்டும் கட்டி எழுப்புவ தற்கு சிங்கள மக்கள் தடையாக இருந்திருக்க மாட்டார் கள். இதற்கு வேறு ஒரு வகையில் தடை ஏற்பட்டிருக் கலாம் என்றே எண்ணத் தோன்றுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெந்தோட்டை காளி கோயில் மீண்டும் கட்டப்பட வேண்டும்

பெந்தோட்டை காளி கோயில் பொலநறுவையை தலைநகராகக் கொண்டு பொ.ஆ. 1153 முதல் 1186 வரை ஆட்சி செய்த முதலாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் அல்லது பொலநறுவையை கைப்பற்றி பொ.ஆ. 1215-1255 காலப்பகுதியில் ஆட்சி செய்த கலிங்க மாகோன் காலத்தில் அல்லது தம்பதெனியாவை தலைநகராகக் கொண்டு பொ.ஆ. 1236 முதல் 1270 வரை ஆட்சி செய்த 2ஆம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் கட்டப் பட்டிருக்கலாம் எனும் மூன்று கருத்துக்கள் உள்ளன. எது எப்படி இருப்பினும் இக்கோயில் சுமார் 750 வருடங்களுக்குக் குறையாத பாரம்பரியத்தைக் கொண்ட ஓர் பண்டைய இந்து கோயிலாகும்.

இத்தனை தொன்மை வரலாற்றைக் கொண்ட இக் காளி கோயில் நன்கு பராமரிக்கப்பட்டு, "சுப்பிரசித்த காளி கோவில்" என பௌத்த மக்களால் அழைக்கப்பட்டது. பின்பு சுமார் 400 ஆண்டுகளின் பின், 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப்பட்டது. அதன்பின் 300 வருடங்களாக சிதைந்து கிடந்த இக் கோயிலை 1884ஆம் ஆண்டு ஆர்த்தர் ஜெயவர்தன எனும் ஆராய்ச்சியாளர் மீண்டும் கட்டி எழுப்ப முயற்சிகள் மேற்கொண்டார். இருப்பினும் அவரது முயற்சி தோல்வியில் முடிந்தது. கோயில் கட்டப்படவில்லை.

இந்நிலையில் கடந்த 20 வருடங்களாக தமிழர் மற்றும் இந்து பாரம்பரியம் தொடர்பான ஆய்வுகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டுக் கொண்டிருந்த போது தென்னிலங்கையில் பல சைவக் கோயில்கள் அடையாளம் தெரியாமல் புதைந்து கிடப்பதையும் அறிய முடிந்தது. இவ்வாறு புதைந்து கிடக்கும் எமது கோயில்களை மீண்டும் கட்டியெழுப்பி தென்னிலங்கையில் இந்துக்களில் பாரம்பரிய அடையாளங்களை நிலை நிறுத்த வேண்டும். பெந்தோட்டை காளி கோயிலை மீண்டும் கட்டுவதன் மூலம் பெந்தோட்டை மக்களின் பண்டைய காவல் தெய்வ வழிபாட்டையும் மீண்டும் கொண்டுவர முடியும்.

எனவே பெந்தோட்டையில், மிகுந்த செல்வாக்குடன் விளங்கி, பின்பு போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட காளி கோயிலை, மேலே இந்நூலில் குறிப்பிட்டுள்ள ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு, மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் எனவும், சக்தியுள்ள தமிழ் அரசியல் தலைவர்கள் இவ்விடயத்தைக் கையிலெடுத்து, அழிந்து போன நம் காளி கோயிலை மீண்டும் அமைத்து, தமிழரின், இந்துக்களில் அடையாளத்தை பாதுகாக்க வேண்டும் எனவும் இந்நூல் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

பெந்தோட்டைக் காளி கோயில் போன்று இலங்கை முழுவதிலும் சுமார் 350 இந்துக் கோயில்கள் மண்ணுள் புதையுண்டு கிடப்பதை கடந்த 20 வருட கால களஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளேன். அம்பாறை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்த இத்தகைய அழிந்துபோன கோயில்கள் பற்றிய விபரங்களை ஏற்கனவே எனது இரண்டு நூல்களில் எழுதியுள்ளேன். மண்ணுள் புதையுண்டு கிடக்கும் ஏனைய கோயில்கள் பற்றிய விபரங்களை அடுத்து வரும் எனது நூல்களில் எழுதவுள்ளேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு, மிகவும் செழிப்புடன் விளங்கி, 16 ஆம் நூற்றாண்டில், 1517ஆம் ஆண்டு அழிக்கப்பட்டு, 501 வருடங்களாக மண்ணுள் புதையுண்டு கிடக்கும் இக்காளி கோயில் மீண்டும் கட்டி எழுப்பப்பட வேண்டும்.*

**அழிந்து போய் மண்ணுக்குள் புதைந்து கிடக்கும் இக் கோயில் வெறும் சிதைவு மட்டுமல்ல, நம் தமிழ், சைவம் ஆகியவற்றின் பாரம்பரியமிக்க அடையாளம்.**
**எமது ஆணிவேர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


1. *The Temporal and Spiritual Conquest of Ceylon-Rev.Fernao De Queyroz-New Delhi,Madras-*1992
2. *Bentota Ruhunu doratuwa-Thomson A.Vandabona-*1996 *Colombo- page.* 13,14,15,18,19
3. *Haritage of Ruhunu-Dr. H.A.P. Abewardana-*2001*-Rajagiriya-page.* 34
4. *Paravi Sandesa-R.A.Liyanarachchi-*2008*-Colombo-page.*90
5. *Lanka Nest News-*30-4-2008*-Hedi Demala Kanda, Ancient Temple.*
6. *Journal of the Royal Asiatic Society of Ceylon Branch-Vol. VIII-*29-1884*-page.* 342 (436) 340-345
7. *Sundaytimes-News Paper-Gamini Punchihewa-*6 *July* 2006
8. *Culavamsa-Wilhelm Geiger-New Delhi, Madras-*2003*-* 86:16,17,22*-page.* 172,173
9. *Lanka Nest News-*9-3-2008*-Galapatha Rajamaha vihara*
10. *Sinhala Sandesa Kavya-P.N.Pussella-Dankotuwa-*2009*-page.*16,17,55
11. *Sinhala SandesaKavya Sangrahaya-S.Wijesooriya-Maharagama-*2004*-page.*59
12. *Gaalu Disave Vihaara Vangsaya- Ranjith Amara keerthi Palihapitiya-Colombo-*1993*-page.*103
13. *Pawraanika Shtana Saha Shmaraka- Galla Disthrikkaya-Tharidi Ranchagoda-Archaeological Department Publication-*2005*-page.*6,7,8,11,26,27




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. *Historic Sandarawala at Baddegama- Amazing Lanka.com*
15. *Dutugemunu Viharaya-Legends-dutugemunu viha raya. org*
16. *Benthara Galapatha Rajamaha Vihara-Amazing Lanka.com*
17. ஈழத்து இந்து சமய வரலாறு-பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்-1996 திருநெல்வேலி, யாழ்ப்பாணம்-பக். 47,48,65,62
18. தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும்-கதிர் தணிகாசலம்-1992 சென்னை-பக். 102
19. தென்னிலங்கையின் புராதன இந்துக் கோயில்கள்-பாகம்1-என்.கே.எஸ்.திருச்செல்வம்-இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்-கொழும்பு-2010-பக்.179,180
20. *Buddhist Temple of Galapatha Rajamaha Vihara*
21. *Sinhala Desiya Vishvakosaya-Acharya Somapala Jayawardana-Wellampitiya-1996-page.61*
22. *Culavamsa-Wilhelm Geiger-New Delhi,Madras-2003-89:19,22,81-page. 117,123*
23. *Seelaalebana Sangrahaya- Vol. 4 (1934 - 1941) - S.Paranavithana page.109,110,115*
24. தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்துசமய வரலாறு என்.கே.எஸ்.திருச்செல்வம்-கொழும்பு-2015-பக்.390
25. *Culavamsa-Wilhelm Geiger-New Delhi,Madras-2003- 74:40-43-page. 24*
26. *Monarchs of Lanka-From Rawana to Rajasinghe-Premasiri Mahingoda-Colombo-2006-page.136*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளி கோயில்

**என்.கே.எஸ்.திருச்செல்வம்**



"போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளி கோயில்" எனும் இந்நூலில், 800 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டு, மிகவும் செழிப்புடன் விளங்கி, 300 வருடங்களின் பின்பு போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டு, மீண்டும் கட்டப்படாமல் 500 வருடங்களாக சிதைந்து கிடக்கும் பிரசித்தி பெற்ற காளி கோயிலின் வரலாறு, அக்கோயில் பற்றிய அரிய பல தகவல்கள், இக்கோயில் பெந்தோட்டையில் இருந்தமைக்கான ஆதாரங்கள், கோயிலின் பண்டைய தொல்பொருள் சின்னங்கள் பற்றிய விபரங்கள் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்நூலாசிரியர் **"தமிழ்மாமணி"** திருச்செல்வம் அவர்கள் கிழக்கிலங்கை அம்பாறையில் பிறந்தாலும் சுமார் 35 வருடங்களாக தலைநகர் கொழும்பை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர். இவர் இந்தியாவில் தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி கோட்டையூர் வெள்ளையத் தேவரின் கொள்ளுப் பேரனும், நல்லமுத்து தேவரின் பேரனுமாவார். இவரது பெற்றோரான கல்யாணசுந்தரம் - இராமக்காள் தமிழ்நாட்டையும், இலங்கையில் திருகோணமலையையும் சேர்ந்தவர்கள் என்பதுடன், இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் கலைமாணிப் பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆடை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றில் பொது முகாமையாளராகப் பணியாற்றும் ஆய்வாளர் திருச்செல்வம் வரலாற்றுத் துறையிலும், தமிழ்த் திரைப்படத் துறையிலும் கொண்ட ஈடுபாட்டால் 200க்கும் அதிகமான வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று பலராலும் பாராட்டப் பெற்றவர். இவர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராக இருப்பதுடன் முன்னணியிலுள்ள சமூக, சமய அமைப்புகளிலும் பொறுப்பான பதவிகளை வகித்து வருகின்றார்.

தமிழ்-சைவசமயம்-தமிழ்க்கலைகள் தொடர்பான ஆழமான அறிவுத் தேடலும், அவற்றைத் தெளிவாக விளக்கும் ஆற்றலும் இருப்பதால் திருச்செல்வம் இலங்கையின் பல பாகங்கங்களில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற மாநாடுகள், கலந்துரையாடல்களிலும் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள விருப்புடன் அழைக்கப்பட்ட நம் நாட்டுப் பிரதிநிதியும் ஆவார். தமிழ்மாமணி விருது, நுழைபுலம் ஆய்வு விருது, தமிழியல் விருது, இலங்கை இலக்கிய பேரவை விருது, வரலாற்று ஆய்வு கேசரி விருது, வித்தகர் விருது ஆகிய விருதுகளைப் பெற்ற திருச்செல்வம் தொடர்ந்து தேடல் மற்றும் வரலாற்று ஆய்வுகள் மூலமான முடிவுகளைப் பதிவுகளாக்கி, அவற்றால் பயனுறு பணிகள் பல ஆற்றிட அவரைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**"கலா கீர்த்தி" உடுவை. எஸ். தில்லைநடராசா**
மேனாள் அரச அதிபர்,
மற்றும் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்

ISBN 978-955-3726-02-5
9 789553 726025
விலை ரூபா 325.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org